பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

விலை ரூ. 2 00

மடல்: 3 யாழ்ப்பாணம் விபவ ஆண்டு வைகாசி மீ 30 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1408 ஷவ்வால் பிறை 26 (12 6 1988 UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்: 103

சேட்டிங் சூட்டிங்
றெடிமேட் சேட்ஸ்
சிறுபிள்ளைகளின் ஆடைகள்
போன்றவற்றிற்கு நாட வேண்டிய இடம்
கிறவுண்ஸ்
22 A, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

Specialist in
WEDDING SARIES
and all other
Requirements in
Textiles
CROWNS
22 A, MODEL MARKET,
JAFFNA.

## தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு

# நம்பிக்கைக் கரம் நீட்ட இந்தியாவுக்கு அழைப்பு

### பிரசைகள் குழுவினரின் பத்திரிகை அறிக்கை வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 12

ஸ்ரீலங்கா அரசாங்கத்தை நம்பி, ஒப்பந்தத்தை அமுல் செய்யும் பொறுப்பை அதனிடம் ஒப்படைத்திருக்கும் இந்திய அரசு,

அதே அடிப்படையில், இதுவரை நடந்தவற்றை மறந்து தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தனது நம்பிக்கைக் கரத்தை நீட்ட வேண்டும்.

அந்த எண்ணமே ஈழத் தமிழ் மக்கள் மத்தியில் வளர்ந்து வருகிறது.

வடக்கு, கிழக்கு பிரசைகள் குழுக்களின் இணைப்புக் குழு விடுத்துள்ள பத்திரிகை அறிக்கை ஒன்றில் மேற்கண்ட விடயம் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு பிரசைகள் குழுக்களின் இணைப்புக் குழுவினர் இம்மாதம் எட்டாம் திகதியிட்டு பத்திரிகை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில் இணைப்புக் குழுவின் தலைவர் திரு எஸ் அருணாசலமும், செயலாளர் திரு சிவானந்தராஜாவும் கையெழுத்திட்டுள்ளனர்.

தமது கருத்து வடக்கு, கிழக்கு வாழ் துன்பப்படும் தமிழ் மக்களின் கருத்தைப் பிரதிபலிப்பதாக என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இணைப்புக் குழுவினரின் நீண்ட அறிக்கையின் முக்கிய பகுதிகள் வருமாறு:-

தமிழ் பேசும் மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு இலங்கை இந்திய சமாதான ஒப்பந்தத்தை அமுல் செய்வதற்கு ஒத்துழைப்பதற்கு தாம் தயார் என்றும் உரிய பேச்சுவார்த்தையின் பின்னர் ஆயுதங்களைக் கீழே வைக்கத் தயார் என்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்கனவே உறுதியளித்துள்ளார்.

[6 ஆம் பக்கம் பார்க்க]

முச்சந்தி முரளி



ஆக்களே உருமாறிப் போற நிலை இருக்கையிக்கை, வீதியள் மாறினா என்ன, குறைஞ்சா பேய்விடும் எண்டு நினைச்சிட்டினம் போலை.....!

### வெள்ளவாயாவில் வர்த்தகர் கொலை

கொழும்பு, ஜூன் 12

வெள்ளவாயா பகுதியில் பிரபல வர்த்தகரான கே. பி உபசேன என்பவர் இனந் தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

எத்திலிவேவா சந்தியில் வைத்து இச்சம்பவம் இடம்பெற்றது. [ஓ-எ]

### மீண்டும் ஓர் அக்டோபர் நிலை வேண்டாம்

# ஈழத்தமிழர் பிரச்சினை தீர சங்கராச்சாரியார் உதவ வேண்டும்

## நல்லை ஆதீன முதல்வர் கருத்து

யாழ்ப்பாணம், ஜூன் 12

தமிழர் பிரதேசங்களில் மீண்டும் அக்டோபர் நிலை ஏற்படாதிருக்க, இந்திய மத்திய அரசுடன் நெருங்கிய தொடர்புடைய ஸ்ரீசங்கராச்சாரிய சுவாமிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் இவ்வாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

இன்றைய நிலை தொடர்பாக ஆதீன முதல்வரிடம் கேட்டபொழுது அவர் மேலும் தெரிவித்ததாவது:

துன்பம் என்பது இன்று மட்டும் ஏற்பட்டது அல்ல. நாயன்மார்கள் வாழ்க்கையில் கூட துன்பம் பின்னிப் பிணைந்திருந்தது.

ஆனால் துன்பங்கள் என்றுமே நிலைத்ததும் இல்லை. எனவே நிம்மதியற்ற இன்றைய சூழ்நிலையில் தமிழ்நாடு ஆதீன முதல்வர்கள் ஒன்றுகூடி, மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு ஈழத் தமிழர் பிரச்சினையைத் தீர்க்குமாறு ஒரே குரலில் வலியுறுத்தி எங்களுக்கு உதவ வேண்டும்.

கடந்த அக்டோபர் மாத இராணுவ நடவடிக்கைகளில் பல கோவில்கள் சேதமடைந்தன. பல மரணங்கள் நிகழ்ந்துள்ளன.

பல அகதி முகாம்கள் உருவாக்கப்பட்டன. பல சொத்தழிவுகள் ஏற்பட்டன. மதகுருமார்கள் பாதிக்கப்பட்டனர். எனவே மீண்டும் அப்படியானதொரு அக்டோபர் நிலை ஏற்படக் கூடாது.

தற்பொழுது உள்ள பிரச்சினையை சரியான முறையில் சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சு நடத்தி நிம்மதியான வாழ்வுக்கு வழிகோல வேண்டும்.

இதற்கு தமிழ்நாடு ஆதீன முதல்வர்களும், இந்திய மத்திய அரசுடன் நெருங்கிய தொடர்புடைய ஸ்ரீசங்கராச்சாரிய சுவாமிகளும் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் — இவ்வாறு சுவாமி அவர்கள் தெரிவித்தார். [அ-10]

# வவுனியாவில் 5 தினங்களாக கச்சேரி இயங்கவில்லை

வவுனியா ஜூன் 12

கடந்த திங்கட்கிழமை தொடக்கம் 5 தினங்களாக வவுனியாவில் கச்சேரி, வங்கிகள், நீதிமன்றம் மற்றும் அரச அலுவலகங்கள் என்பன இயங்காமல் மூடிக்கிடந்தன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சிவில் நிர்வாகச் சீர்குலைப்பு நடவடிக்கையை அடுத்து அவர்களால் அரச அலுவலகங்கள் இயங்கக் கூடாதென்று அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

இதேவேளையில் நாளை 13 ஆம் திகதி தொடக்கம் இனிமேல் அரச அலுவலகங்கள் இயங்க கூடாதென்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ-164

# பஸ்களில் வைத்து நடக்கும் புதுவிதமான கணக்கெடுப்பு!

திருகோணமலை ஜூன் 12

திருகோணமலை நகரினுள் பிரவேசிக்கும் பஸ்களில் உள்ள பயணிகளில் எத்தனைபேர் தமிழர், எத்தனைபேர் சிங்களவர், எத்தனைபேர் முஸ்லிம்கள் என்ற விவரங்களை இந்திய அமைதிப்படையினர் சேகரித்து வருகின்றனர் என்று அறிவிக்கப்படுகிறது.

அனுராதபுரம்— திருகோணமலை வீதியிலும், கண்டி- திருமலை வீதியிலும் - திருகோணமலை நகருக்கு அருகில் உள்ள பகுதிகளிலும் இந்திய அமைதிப்படையின் தடை முகாம்கள் சில உண்டு.

திருகோணமலை நகருக்குச் செல்லும் பஸ்கள் அத்தடை முகாம்களில் வைத்துச் சோதனையிடப்படுகின்றன.

அப்போது பஸ்களில் உள்ள பயணிகளில் தமிழர் எத்தனைபேர்? முஸ்லிம்கள் எத்தனை பேர்? சிங்களவர் எத்தனை பேர்? என்ற விவரங்கள் பஸ் சாரதிகள், கண்டக்டர்களிடம் கேட்கப்படுகின்றன.

அவ்விவரங்கள் பதியப்படுகின்றன என்று தெரியவருகின்றது. (ஓ-உ-எ)

### 20 சதவீதம் வரை வட்டி வழங்குவதற்கு

#### நிதி நிறுவனங்களுக்கு அனுமதி

கொழும்பு ஜூன் 12

ஆகக் கூடியது வருடம் ஒன்றுக்கு 20 சதவீதம் வரை பணவைப்பாளருக்கு வட்டி வழங்க நிதி நிறுவனங்களுக்கு (பினான்ஸ் கம்பனிகளுக்கு) மத்திய வங்கி அனுமதி வழங்கியிருக்கிறது.

1987 டிசம்பரில் மத்திய வங்கி, நிதி நிறுவனங்கள் வட்டி வழங்குவது சம்பந்தமாக விடுத்த கட்டுப்பாட்டை மீளாய்வு செய்திருக்கிறது.

இது சம்பந்தமான பணிப்புரை ஒன்றை மத்திய வங்கி நிதி நிறுவனங்களுக்கு கடந்த வெள்ளிக்கிழமை விடுத்தது.

அதன்படி பொது மக்கள் வைக்கும் வைப்புப் பணத்துக்கு நிதி நிறுவனங்கள் ஆகக் கூடியது வருடம் ஒன்றுக்கு 20 சதவீத வட்டியை இனி வழங்க முடியும்.

வைப்புப் பணத்தை வைப்பதற்கான கால எல்லையைக் கவனிக்காது 20 சதவீத வட்டியை வைப்பாளருக்கு நிதிநிறுவனங்கள் இனி வழங்க முடியும் என்றும் அறிவிக்கப்படுகின்றது.

1987 டிசம்பரில் மத்திய வங்கி விடுத்த உத்தரவின்படி ஒரு வருட காலத்துக்கு வைக்கும் வைப்புப் பணத்துக்கு ஆண்டுக்கு 17 சதவீத வட்டியையும், அதற்கு மேற்பட்ட காலத்துக்கு வைப்புச் செய்யப்படும் பணத்துக்கு வழங்கப்படும வட்டி ஆண்டு ஒன்

[6 ஆம் பக்கம் பார்க்க]

### ● உருமாறி வரும் வீதி!

யாழ்ப்பாணம் ஜூன் 12

வவுனியா— யாழ்ப்பாணம் வீதியில் தார் போடப்பட்டிருந்த சுமார் 6 மைல் நீள வீதி, கிறவல் வீதியாக மாறிவருகிறது என்று தெரிகிறது.

புளியங்குளத்தில் இருந்து கனகராயன் குளம் வரையான வீதியே இப்படி உருமாற்றம் பெற்று வருகிறது!

அந்த வீதியைத் திருத்தக் கொட்டப்பட்ட கிறவல், வீதியின் பள்ளங்களை நிரப்பியதுடன் வீதியும் கிறவல் போடப்பட்ட வீதியாகக் காட்சியளிக்கின்றது (ஓ உ-எ)

### சிப்பாய் சுட்டுக் கொலை

வவுனியா, ஜூன் 12

மாமடுவ ஸ்ரீலங்கா இராணுவ முகாமைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் சக சிப்பாய் ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றுள்ளது.

இரண்டு இராணுவச் சிப்பாய்களுக்கிடையே ஏற்பட்ட தகராறு ஒன்றே கொலைக்குக் காரணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இராணுவ அதிகாரிகள் பொலிஸாரின் உதவியுடன் விசாரணை நடத்தி வருகின்றார்கள்.

இதனிடையில், வெள்ளிக்கிழமை காலை 6 மணியளவில் வவுனியா குருமண்காடு என்ற இடத்தில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாத சிலரால் சுட்டுக் கொல்லப்பட்டார். [ஓ-164]

### சுபநேரம்

12—6—1988
வைகாசி 30
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்:
8.52 முதல் 10.22 வரை
ராகுகாலம்:
4 22 முதல் 5.52 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
கார்த்திகை விரதம்

### கால்நடைகளுக்கு கோமாரி:

# தடுப்பு ஏற்பாடுகளில் அதிகாரிகள் தீவிரகவனம்

## செவ்வாயன்று மருந்து வரும்

யாழ்ப்பாணம், ஜூன் 12

கோண்டாவில் பகுதியில் கோமாரி நோயினால் இதுவரை 3 மாடுகள் இறந்துள்ளன. நோய் அறிகுறிகள் தென்பட்ட 3 மாடுகள் கால்நடை திணைக்கள அதிகாரிகளின் ஆலோசனைப்படி கொல்லப்பட்டுள்ளன. மேலும் நாலு மாடுகளுக்கு நோய் அறிகுறிகள் காணப்படுகின்றன.

இதன் காரணமாக அந்த மாடுகளிலிருந்து உடலுறுப்பு மாதிரிகள் (சாம்பிள்கள்) எடுக்கப்பட்டுள்ளன. இவை கன்னொருவ கால்நடை ஆராய்ச்சி நிலையத்திற்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டன.

''பரிசோதனை முடிவுகள் தெரிந்த பின்பே 'கோமாரி' நோய்க்கான பூரண தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளோம்'' — என்று கால்நடை உற்பத்தி, சுகாதார திணைக்கள வட பிராந்திய உதவிப் பணிப்பாளர் திரு எஸ் எஸ் பாலச்சந்திரன் உதயனுக்குத் தெரிவித்தார்.

கோண்டாவிலில் கோமாரி நோய் கண்டு இரு மாடுகள் இறந்ததை அடுத்து நாலும், கால்நடை வைத்தியர்களான திரு ரீ வர்ணலிங்கம், திருமதி எஸ். தனபாலசிங்கம் ஆகியோருடன் விரி

[6 ஆம் பக்கம் பார்க்க]

செய்திச் சாரம்

### 19 ஆம் திகதி தாதிகள் பரீட்சை

யாழ்ப்பாணம் ஜூன் 12

சுகாதாரத் திணைக்களத்தினால் நடத்தப்படும் வடபகுதிக்கான [யிசிச] தாதிகள் ஆட்சேர்ப்புக்கான பரீட்சை எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ளது.

இந்தப் பரீட்சை யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் நடைபெறும்.

பிரஸ்தாப பரீட்சையில் தோற்ற உள்ள வடபகுதியைச் சார்ந்த 216 பேருக்கான பிரவேச அட்டைகள் யாழ் சுகாதாரத் திணைக்களத்துக்கு கிடைத்துள்ளன.

இவை அடுத்த சில தினங்களில் பரீட்சார்த்திகளுக்கு தபால்மூலம் அனுப்பிவைக்கப்பட உள்ளன. [ஓ 9]

### நெல்லியடியில் தேடுதல்

யாழ்ப்பாணம், ஜூன் 12

நேற்று நெல்லியடி, கரவெட்டிப் பகுதிகளில் தீவிர தேடுதல் நடைபெற்றது.

நேற்றுக்காலையில் இப்பகுதியூடாக வீதியில் போக்குவரத்துச் செய்த அனைவரும் தடுத்து வைக்கப்பட்டு தலையாட்டிமுன் நிறுத்தப்பட்டனர்.

இதன் காரணமாக நேற்றுக் காலையுடன் நெல்லியடிப் பகுதியில் கடைகள் பூட்டப்பட்டன. நகரும் காலையுடனேயே வெறிச்சோடிக் காணப்பட்டது [ஓ-9]

### இளைஞர் சுட்டுக்கொலை

கோப்பாய், ஜூன் 2

கைதடி மத்தியில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாத கோஷ்டி ஒன்றினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது [ஓ-72]

### கொலையும் சூறையாடலும்

நேற்று வடமராட்சி மாலிசந்திக்கு அருகில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாத சிலரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்.

சைக்கிளில் மூவர் அல்வாயூடாகப் பயணம் செய்தபோதே இத்துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் இதில் ஒருவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டதாகவும் தெரியவருகிறது.

ஏனைய இருவரில் ஒருவர் பலத்த காயத்திற்கு உள்ளானார். சம்பவம் நடந்த இடத்தை அமைதிப் படையினர் சுற்றி வளைத்துள்ளனர். [ஓ-9]

### உடல் வேறு தலை வேறான சடலம்

வடமராட்சி, ஜூன் 12

உடல் ஓரிடத்திலும், தலை வேறோரிடத்திலுமாக கிடந்த ஒருவரின் சடலம் ஒன்று சேர்க்கப்பட்டது.

இச்சடலம் வல்வெட்டித்துறை வாடியடி வாசியான மார்க்கண்டு ஆனந்தகிருஷ்ணன் வயது 30 என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இனந்தெரியாத சிலராலேயே இவர் வெட்டிக் கொலைசெய்யப்பட்டார் எனக் கூறப்படுகிறது [ஓ160]

### மட்டக்களப்பு அம்பாறையிலும் வங்கி மூடப்படும்

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் உள்ள வங்கிகள் யாவும் நாளை, வெள்ளிக்கிழமைகளில் மூடப்பட்டிருக்கும் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். [இ - 21]

இளைய கலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ சின்னஞ்சிறு விளம்பரம் ★

## விற்பனைக்கு

சகலவிதமான T. V. பூஸ்ரர், அன்ரனா வயர், றேடியோ, றேடியோ உதிரிப்பாகங்கள் கைக் கடிகாரங்கள், சுவர்க்கடி காரங்கள் மின்விசிறிகள் சைனா மின் அடுப்புகள் T. V ஸ்ராண்ட் எவர் சில்வர் பொருட்கள் ஹைஸ்குக்கர் எலெக்றிக் கேத்தில்களும் கரம் போட், விளையாட்டுப் பொருட்கள் அன்பளிப் புப் பொருட்கள் மற்றும் ரவலிங் பாக்ஸ், பாடசாலை பாக்ஸ் வாங்கு வதற்கு நாடுங்கள். New City Traders 135, Kasturiar Road Jaffna (C 52?9)

கிணற்றடி குளியல் அறை மலசல கூடம் மாட்டுத் தொழுவம், ஆகிய இடங்களை பளிச் சிட இரக்குமதி செய்யப் பட்ட M.G M பிளீச்சிங் பவுடர் [Ch'o'ine powder] 200gr 100gr பைக் கற்றுகளில் எல்லா பிர பல கடைகளிலும் மொத் தமாகவும் சில்லறையாக வும் பெற்றுக்கொள்ள லாம். விநியோகஸ்தர் கள் M G M and tores 777 K K·S Road and 208, Ist Cross Street, Jaffna. [4202]

Sony 20'' 2020 sony B/W12'' National Video N.V 380 விற்பனைக்கு உண்டு விபரங்கட்கு S T L வீடியோ கிளப் No: 3, நவீன சந்தை மேல்மாடி திருநெல் வேலி. 4206)

பாவித்த நல்ல நிலை மையிலுள்ள கனத்த தட்டால் செய்த கேற் றும் பெரிய வேப்பங் கதவு நிலையும் விற்பனைக் குண்டு. தொடர்பு, நடராஜன் றங்கநாதன் ஒழுங்கை, புகையிரத வீதி, தெல்லிப்பளை. (4208)

அல்சேஷன் 40 நாட் கள் ஆண் குட்டிகள் இரண்டு உடன் விற் பனைக்கு உண்டு நல்ல தனிரகம் Wormed and Weaned பழைய நம் பர் 181 கோவில் வீதி, நல்லூர். 4400)

பொமேறியன் நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. இடம் சேவ்ரிக் கும் மக்கள் வங்கிக்கும் இடையில் No: 50 மூன் றாம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம் (4204)

சுத்தமான புரொயிலர் கோழி இறைச்சி [Halal] விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும் M G M & Stores 777 K.K S Road Jaffna (4203)

Broilor இறைச்சிக் கோழிகள் எப்பொழுதும் பெறுக்கொள்ளலாம். சுத்தம்செய்துகொடுக்கப் படும் தொடர்பு: Nallur Farm Centre. C/o, நல்லூர் வீடியோ சென்ரர் 19 முருகேசன் லேன் நல்லூர். (4073)

Lohmann வெள்ளை சிகப்பு முட்டைக்குஞ்சுகள் புரொயிலர் குஞ்சுகள், Golden Comet சிகப்பு பேடுக்குஞ்சுகள் சேவல் குஞ்சுகள். Hy-Line வெள்ளை கறுப்பு பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமையிலும் விநியோகிக்கப்படும், உடன் முன் கூட்டிய பதிவு செய்யவும் Nallur Farm Centre. C/o, நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசன் லேன் நல் லூர். 4074)

Lohaman இல சிகப்பு முட்டையிடும் ஒருநாள் கோழிக்குஞ்சு யூலை மாத முதல் வாரத்தில் விநியோகிக்கப்படும் முன் கூட்டியே பதிவு செய்யப் படும். விபரங்களுக்கு M G. M Forge Stores 208, 1st Cross st Jaffna. [4218]

## விற்பனைக்கு

யூனியன் மேடைத் தராசு 250 Kgm நிறை உடையது. பாவையிடும் இடம் இல 30. 3ஆம் குறுக்குத்தெரு. யாழ்ப் பாணம். (4390)

எங்கள் ஸ்தாபனத்தில் கீழ் குறிப்பிட்டுள்ளவை மிகவும் மலிந்த விலையில் விற்கப்படும் 1. G I. Fittings 2 Brass Screws 3 Brass Gate Locks. 4. Mammotties Jaffna Type, 5 Spare Parts for Hullers தொடர்பு: சாமுவேல் சன்ஸ் அன் கொம்பனி லிமிட்டட் 206, 208 ஆஸ்பத்திரி யாழ்ப்பாணம் [C/5437]

Pomeranian White (Japanese Pit) பொமறேனியன் வெள்ளை [யப்பானீஸ் பிற்] விற்பனைக்கு உண்டு தொடர்புகொள் ளவும் No. 36, மார்டீன் வீதி, யாழ் பா ணம். [4213]

ஒரு மாத சேவற் குஞ் சுகளும் ஒரு கிழமை, சேவற் குஞ்சுகளும் விற் பனைக்கு உண்டு. தொட ர்பு: க. தேசரெத்தினம், 48/9, 1ஆம் ஒழுங்கை பருத் தித்துறை வீதி, யாழ்ப் பாணம் [4210]

புதிய கிபகோ குக்கர் 4 காஸ் அடுப்புகள் 2 எலெக்றிக் பிளேற். எலெக்றிக் சடிகாரம் திமிடரைமர் utomche Ouen Timer உடன் விற்பனைக்குண்டு குரி மெய்ய ரியல ஒழுங்கை, மானிப்பாய். [4416]

இறைச்சிக் கோழி விற் பனைக்கு உண்டு. ஒரு கோழி 50/- ரூபா தொடர்பு பா.சொர்ணலிங்கம் 48/3, 1ஆம் ஒழுங்கை பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணம் [4209]

சாளி Charly) மோட் டர் சைகிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும் இல 7, நிக்கல ஒழுங்கை, கச்சேரி நல்லூர வீதி கண் டிசுளி [4395]

தனிப்பாவிப்பிலுள்ள 88 Br C-90 மோட்டார் சைக்கிளும 2'' Alcon நீர் இறைக்கும் இயந்தர மும உடன விற்பனைக்கு உண்டு அருள் ஆனந்தன No 8, றெயில்வே குவா ட்டஸ், ஸ்ரான்லி ரோட் [ஆயுள் வேதக் கல் லூரிக்கு முன்பாக] [4217]

பாவித்த வீட்டுத் தளபாடங்கள் Brother தையல மெஷின் ஹோல் செற் சாப்பாட்டு மேசை, கதிரைகள், அலுமாரி, சோகேஸ், கண்ணாடி கைகள், மின்தொட்டி, Hot Plate, Dinner Set, கிடாரம், கட்டில் மெத்தைகள், கண்ணாடி மேசைகள் மற்றும பல உடன் மலிவு விற்பனைக்கு. M. தியாகராஜன் 326, பிரதான வீதி, யாழ்ப் பாணம் (சென். பற்றிக்ஸ் சந்தி அருகில்) (4388)

## காணி விற்பனைக்கு

சித்தன்கேணிச் சந்தியி லிருந்து நூறு மீற்றர் தூரத்தில் சங்கக்கடைக்கு அருகாமையில் றோட்டு முகப்புடைய மூன்று பரப்புக் காணி விற்பனைக் குண்டு. தொடர்பு கொள்ளும் முகவரி மு. அருணாசலம் J. P. சித்தன்கேணி [4212]

பரந்தன் முல்லைத்தீவு றோட்டு சந்தியிலிருந்து ஒருமைல் தூரத்திலுள்ள பூங்காவனம் சந்தி றோட்டு முகப்பில ஆறு பரப்பு நெற்காணி விற்பனைக்கு உண்டு நெற் கொள்வனவு சந்தைப்படுத்தல் ஆலை, கடைகளுக்கு கேந்திரஸ்தானம். தொடர்பு, கசுப்பையா, ஓய்வுபெற்ற ஓவசியர், தெல்லிப்பளை [4095]

## தேவை

London பரீட்சைக்கு Accounts கற்பிப்பவர் கள் தேவை. உடன் விண்ணப்பிக்கவும C/o 227, உதயன் (C 5405)

கற்பூரம் மெழுகுதிரி வேலை செய்யத்தக்க பெண் பிள்ளைகள் தேவை. நேரில் வரவும். (குறிப்பு) நல்லூர்க் கோவில் பின் வீதி. V அரியரெட்ணம், 151 [345] கோவில் வீதி, நல்லூர். (4205)

பல (Denture) வேலை தெரிந்தவர் ஆண் வேலையாள் தேவை வயதுக் கட்டுப்பாடு இல்லை. யாழ் மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத் தக்கது. அனுபவத்திற்கு தகுந்த வேதனம் வழங் கப்படும். நேரில் பேசி தீர்மானிக்கலாம் முழு விபரங்களுடன் விண்ணப் பிக்கவும் C/o 228, உத யன் யாழ்ப்பாணம் (42?0)

## மணமகள் தேவை

நற்குடும்பத்தைச் சேர்ந்த இந்துமத, கனடாவில் கௌரவமான தொழில் புரியும் செவ் வாய் குற்றமற்ற 32 வய துடைய மகனுக்கு கனடாவில் வதியும் தாயார், அழகும், சாதாரண கல்வியறிவுமுடைய மணமகளை விரும்புகின்றனர். தொடர்பு C/o 229 உதயன், யாழ்ப்பாணம் 42?5)

யாழ் இந்து வேளாள விஞ்ஞான பட்டதாரிக்கு நலமொழுக்கம் முடையமணப்பெண் தேவை 33 வயதிற்குட் பட்ட விஞ்ஞான பட்ட தாரிகள் விரும்பப்படுவர் சகல விபரங்களுடனும் விண்ணப்பிக்க வேண்டும் இல 155, C/o உதயன் யாழ்ப்பாணம் [3361]

## தவறிவிட்டது

செல்வி விக்னேஸ்வரி நடேசன். சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி என்னும் பெயர் விலாசத்தை யுடைய எனது அடையாள அட்டை தவறி விட்டது கண்டெடுத்த வர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (4214)

## சேவை

TYPEWRITERS தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்தமுறையில் திருத்திக் கொள்ளவும் Fudo Enterprises 39/17 3rd Lane, Power House Road, Jaffna (Samy & —Co Shabra அருகாமையில்(C 5300)

## முக்கிய அறிவித்தல்

திரு சின்னத்தம்பி தம்பிராசா குலசிங்கம் PassPort No: 0212100H திரு நாகன் மாணிக்கம் ரட்ணவேல் PassPort No: 0222741H மேற்படி நபர்கள் உடன் கீழ்க் காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும் திரு K மகேந்திரன், கூளாவடி ஒழுங்கை, ஆனைக்கோட்டை (4211)

## வகுப்பு

Spoken English with Grammar புதிய பிரிவு வெள்ளி தவிர்ந்த நாளாந்த வகுப்புகள் காலை 7 00 - 8 00 மணி [45 வகுப்புகள்] S. B Iyar 12, வைமன் வீதி நல்லூர். ஆரம்பம் 15-6-88 (4393)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Hisex, Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள், Hy - Line வெள்ளை, கறுப்பு பேட்டுக்குஞ்சுகள். Hybro புரொயிலர் குஞ்சுகள் ஒவ்வொரு வாரமும் முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். சற்குணராஜா அன் பிறதர்ஸ் பிரம்படிலேன், கொக்குவில். (4151)

---

புனித யூதாததேயுவின் வழியாக நாம் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்கு யேசுவுக்கு நன்றி சொல்ல வாசகர்களை அழைக்கிறோம்.

திருமதி. கல்பனா பகீரதன்

(4259)

---

# கொம்பியூட்டர் பயிற்சி

**மீண்டும் யாழ்நகரில்!**

## Diploma in Data Processing & Computer Programming in BASIC & COBOL

Languages Courses இற்கான புதிய பிரிவுகள்:

பிரிவு-1 : 18-06-1988 [9 30 a m.]

பிரிவு-2 : 25-06-19 8 [2.00 p.m.]

★ Practicals உலகப் புகழ்பெற்ற I B M. Super/XT Computerகள் உட்பட பல Computerகளில் File Handling Project Work உட்பட பல்கலைக்கழக மாணவர்களுக்கேற்ப BBC Basic 2ம் மிகத் தரமான முறையில் பயிற்றப்பட்டு முடிவில் Inter Link Group Certificates தகுதி அடிப்படையில வழங்கப்படும்.

★ வேறிடங்களில் 'Basic' என பயின்றும், File Handling, Project, Graphic போன்றவை செய்யாதோருக்கு I B M. Computerகளில் சலுகை முறையில் Special Training அளிக்கப்பட்டு Training Certificate வழங்கப்படும்.

★ வெளியார் வேலைகளுக்கு Programme தயாரித்தளிக்க இருப்பதால் I Wang Computerகளில் Trainee Programmers போன்றோர் தேவையாதலால் விண்ணப்பங்களைச் சொந்த கையெழுத்துப் பிரதியில் அனுப்பவும்,

★ சேரும்போது செலுத்த வேண்டியது ரூபா 400/- மட்டுமே.

தெல்லிப்பழை கிளையிலும் கரவெட்டி கிளையிலும் பயிற்சிகள் ஆரம்பமாகின்றன

Administrative Office;

# IDP

**Institute of Data Processing**

342, K.K.S. Road — (சிவன் கோவிலடி)

யாழ்ப்பாணம்.

(C/5423)

---

## புதிய தொழில் பயிற்சி நெறிகள்

**Radio T. V. & Deck**
**Motor Winding**
**Electrical Wiring**

ஆரம்பம்: 15 6 88

பதிவுகட்கு:-

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**

14, St Paters Lane,
Hospital Road,
JAFFNA.

(C-5435)

---

## சுட்டுக்கொலை

சின்னத்துரை நந்த கோபாலன் என்பவர் இனந் தெரியாத கோஷ்டியினரால் பட்டப்பகலில் சுட்டுக் கொலை செய்யப் பட்டார்.

இச்சம்பவம் சித்தன் கேணி பிளவத்தை சன சமூக நிலையச் சந்தியில் நடைபெற்றது.

தொல்புரத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியர் திரு சின்னத் துரையின் மகன் நந்த கோபாலன் (38 வயது) என்பவரே இறந்தவர் ஆவார். [இ - 161]

---

## கேள்வி அறிவித்தல்

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை**

யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத்தின் மருதனாமடம் இடைவெளியில் அமைந்துள்ள இராம நாதன் நுண்கலைப்பிரிவில் சைவ சிற்றுண்டிச் சாலையை நடாத்துவதற்காக இலங்கை, யாழ்ப்பாணப் பல் கலைக்கழக நிதியாளரினால் 1988- 06- 27 ந் திகதி நண்பகல் 12-00 மணிவரை பொறிப் படப்பட்ட கேள்விகள் ஏற்றுக் கொள்ளப் படும்.

கேள்விப் படிவங் களை இப்பல்கலைக்கழ கத்தின் நலச்சேவை கள்கிளையிலிருந்து மீள ளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 250/ உம், மீள ளிக்கப்படாத கட்ட ணமாக ரூபா 25/-உம் பல்கலைக்கழக நிதிக் கிளையில் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டினைச் சமர்ப்பித்துப் பெற் றுக் கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள் விப் படிவங்களில் அனுப்பப்படாதவிண் ணப்பங்கள் நிராகரிக் கப்படும்.

மேலதிக விபரங்க ளைக் காரியாலய நேரங் களில் என்னிடமிருந்து பெற்றுக் கொள்ள லாம்.

பதிவாளர்
08- 06- 1988
[C5430]

---

**THE EXPRESS INSTITUTE KOPAY**

# A/L - 88

பௌதிகவியல் (இறுதி அலகு)

# SOUND

புதன், வெள்ளி 5.00—6 30 P M

திரு. S. சோதிலிங்கம்
B. Sc ( Hons)

இரசாயனவியல் (இறுதி அலகு)

பௌதீக இரசாயனம்

திரு. தில்லை
B Sc ( Hons )

(4255)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்;
15 - 02 - 1915

மறைவு :
12 - 06 - 1987

**திருமதி அடைக்கலம் யோசப்**
(இளைப்பாறிய ஆசிரியை-மன்னார்)

அன்புடனும் ஆதரவுடனும் எங்களைக் காத்த தெய்வமே! நீங்கள் மறைந்து ஓராண்டு சென்றாலும், உங்கள் அன்பு முகமும், நினைவுகளும் பசுமையாகவே இருக்கின்றன.

அன்புடன் நினைவு கூரும்
மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

[4257]

---

# MACK TRAVELS

## ★ மக் ரவல்ஸ் ★

**Auctioneers & Brokers**

- காணிகள் வீடுகள், தளபாடங்கள் மின் உபகரணங்கள் இயந்திரங்கள் மோட்டார் வாகனங்கள் வாங்கவும் விற்கவும் வீடுகள் கடைகள் களஞ்சிய வசதிகள் வாடகைக்கு கொடுக்க, விரும்புவோரும் தேவைப்படுவோரும் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.
- எங்கள் காரியமேல் மாடியில் அறைகள் (Rest Rooms With Attached Bath) சகல வசதியுடனும் வாடகைக்குக் கொடுக்கப்படும்.
- திருமண வைபவங்களுக்கும் உல்லாச பயணிகள் தேவைகளுக்கும் எமது காரியாலய Car வாடகைக்கு விடப்படும்.
- தினசரி எமது விமான சேவை வழமைபோல் நடைபெறுகின்றது. முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.

# MACK TRAVELS

இல, 8 முதலாம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

[C-5415]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்: மாவட்டத்தில்

# கடன் வழங்க ஒரு கோடி ரூபா

யாழ்ப்பாணம், ஜூன் 12

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை யாழ்மாவட்டத்துக்கு 1988 ஆம் ஆண்டுக்கான கடன் வழங்கலுக்கென 1 கோடியே 4 லட்சத்து 85 ஆயிரத்து 500 ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இத்தகவலை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

கிராமிய வீடமைப்புக் கடன வழங்கல் என்ற திட்டத்தின் கீழ் 737 கடன்களை வழங்க 36 லட்சத்து 85 ஆயிரத்து 500 ரூபாவும் நகர வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 710 கடன்களை வழங்க அறுபெத்ட்டு இலட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்தொகைகளை யாழ் மாவட்டம் நேரடி ஒதுக்கீட்டின் மூலமும் முன்பு வழங்கப்பட்ட கடன்களில் மீள அறவிடுதல் மூலமும் பெற்றுக்கொள்ளமுடியும்.

86 ஆம் 87 ஆம் ஆண்டுகளில் இடம் பெற்ற வன்முறையும் சம்பவங்களால் தமது வீடுகளை கட்டிமுடிக்காமல் இடம் பெயர்ந்தவர்களுக்கு இக்கடன் வழங்கலில் முன்னுரிமை வழங்கப்படும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. [இ-5]

## பனையால் விழுந்து மரணம்

கோப்பாய், ஜூன் 12

அண்மையில் வீசிய கடும் காற்றினால் சீவல் தொழிலாளி ஒருவர் பனை மரத்திலிருந்து கீழே விழுந்து மரணமானார்.

இச் சம்பவம் இருபாலைப் பகுதியில் நடைபெற்றது. (இ-72)

சந்திராபெர்னாண்டோ மரணம் குறித்து

## நற்சமூக நிலையம் கண்டனச் செய்தி

யாழ்ப்பாணம், ஜூன் 12

மட்டக்களப்பு பிரஜைகள் குழுத்தலைவர் வணக்கத்துக்குரிய சந்திரா பெர்னாண்டோ கொல்லப்பட்ட செய்தி கேட்டு அதிர்ச்சியும் துன்பமும் அடைந்தோம். இச்சம்பவத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்''

வண சந்திரா பெர்னாண்டோ கொலை தொடர்பாக யாழ் நற்சமூக நடுநிலையத்தினர் மட்டக்களப்பு பிரஜைகள் குழுச்செயலாளருக்கு அனுப்பிவைத்துள்ள செய்தியில் மேற்கண்டவாறுவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

யார் இச்செயலைச் செய்திருந்தாலும் நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இது ஒரு சமூகவிரோதச் செயலாகும்.

சந்திராபெர்னாண்டோ சமூகநீதிக்காகவும், மனித உரிமைக்காகவும் கடந்த சிக்கலான காலகட்டங்களிலும் முகம் கொடுத்தவர்.

இவரின் மரணத்தின் மூலம் ஒரு முன்மாதிரியான தலைவரை நாம் இழந்துவிட்டோம்.

இப்படி செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## குடும்பஸ்தர் வெட்டிக்கொலை

வடமராட்சி, ஜூன் 12

கந்தோவளத்தைச் சேர்ந்த எஸ் மாணிக்கவாசகர் (வயது 45 என்னும் குடும்பஸ்தர் வெட்டிக்கொலை செய்யப்பட்டார்.

இவரின் சடலம் வராத்துப்பளை பருத்தித்துறை நெல்லண்டை பிரதானவீதியில் பொது மக்களால் கண்டுபிடிக்கப்பட்டது. (இ-160)

# தரம் குறைந்த தளபாடங்கள்

பலாலி, ஜூன் 12

யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கு வழங்குவதற்கென சுமார் ஆயிரத்துக்கும் அதிகமான உருக்குக் கால்களினாலான தளபாடங்கள் யாழ் கல்வித் திணைக்களத்திடம் கல்வி அமைச்சினால் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

யாழ் கல்வித் திணைக்களத்தினால் கேள்வி கோரி யாழ்ப்பாணத்தில் செய்துமுடிக்கப்பட்ட தளபாடங்களுடன் ஒப்பிடும்போது மிகவும் தரம் குறைந்தனவாகவே இவை காணப்படுகின்றன.

நீண்ட காலங்களுக்குப்பின்பு கல்வி அமைச்சு நேரடியாக தளபாடங்கள் வழங்கியது இதுவே முதற்தடவை ஆகும்.

இத்தளபாடங்கள் இராணுவ நடவடிக்கைகளினால பாதிப்படைந்துள்ள பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. (இ-119)

## கோப்பாயில் கிறேசர் தூசி

கோப்பாய், ஜூன் 12

கைதடி- கோப்பாய் வீதியில் அமைந்திருக்கும் கல்லுடைக்கும் கிறேசரில் இருந்து எழும் தூசி தற்போதைய கடும் காற்றினால் கோப்பாய்ப் பகுதியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. (இ-72)

## தம்புரா இசைப் பரிசுப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 12

யாழ். நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனமும் 'பல்லவி' சஞ்சிகை நிர்வாகமும் இணைந்து தம்புரா இசைப்பரிசுப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளன.

30 வயதுக்கு உட்பட்ட வட இலங்கை சங்கீத சபையின் ஆசிரிய தராதரப் பத்திரம் பெற்றவர்களும் இராமநாதன் நுண்கலைக் கல்லூரியில டிப்ளோமா பட்டம் பெற்றவர்களும் குருகுலமுறையாய்க் கற்றவர்களும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு முறையே தம்பூரா சுருதிப் பெட்டி, நற்சான்றிதழ் என்பன வழங்கப்படும்.

முதலாம், இரண்டாம், மூன்றும் இடங்களைப் பெறுபவர்கள் போட்டி அமைப்பாளர்களினால் பொதுமக்கள் மத்தியில் நடத்தப்படும்.

இசை நிகழ்சியில் பங்கு பற்றுவோருக்கு பரிசில்கள் அன்றே வழங்கப்படும். [-5]

## மீண்டும் பனை மரங்கள் வெட்டும் படலம்

வடமராட்சி ஜூன் 12

வடமராட்சியில் மீண்டும் பனை மரங்கள் வெட்டும் படலம் ஆரம்பமாகி இருக்கிறது.

கடந்த சில நாட்களாக வடமராட்சியில் வீசும் கடும் காற்றினால் பனை மரங்கள் முறிந்து மின்சப்பங்களையும் சேதமாக்கி உள்ளன.

இதனாலேயே படலர் முன்வந்து மரங்களை வெட்டுகிறார்கள். (இ - 160)

# அடகு நகை பிரச்சினை சட்ட நடவடிக்கைக்கு உதவ வேண்டுகோள்

யாழ்ப்பாணம் ஜூன் 12

அநியாய வட்டியாக மக்கள் வங்கிக்கு அதிகமான பணத்தை அள்ளிக் கொடுப்பகை விடுத்து, அப்படி அதிகமாகக் கொடுக்க வேண்டிய வட்டிப் பணத்தின் ஒரு பகுதியை அனைவரிடமும் சேர்த்து இந்த அநியாய வட்டி வசூலிப்புக் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க அனைவரும் முன்வர வேண்டும்.

யாழ்—அடகு வைத்தோர் சங்க பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய மேற்படி சங்க நிர்வாக சபை உறுப்பினர் திரு. எம். பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தக்கூட்டம் யாழ்—நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

கூட்டத்தில் பொத்துவில், கிளிநொச்சி, பரந்தன் ஆகிய பகுதிகளின் அடகு வைத்தோர் சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் உரையாற்றிய பலரும் மக்கள் வங்கிக்கு எதிராக, சட்ட நடவடிக்கை எடுப்பதை வலியுறுத்தியதை அடுத்து சட்ட நடவடிக்கைக்கான நிதி வசூலிப்பும் நடைபெற்றது. [இ-9]

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 12

ஜீ. சி. ஈ. சாதாரண தரப் புலமைப் பரிசில் பரீட்சை எடுக்கும் மாணவர்களை ஆயத்தம் செய்யும்நோக்குடன் போட்டி முன்னோடிப் பரீட்சைகளுக்கான கருத்தரங்கொன்று காரை நகர் வாரிவளவு நல்லியக்க சபையினரால் நடத்தப்படவுள்ளது.

இந்தக் கருத்தரங்கு எதிர்வரும் 18ஆம் 19 ஆம் திகதிகளில் யாழ் கலாநிதி ஆ. தியாகராசா ம. ம. வித்தியாலயத்தில் நடைபெறும். [இ- நி

## பாலர் பாடசாலை ஆசிரியர் கருத்தரங்கு

பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான இலவச பயிற்சி செயல்முறைக் கருத்தரங்கொன்று கடந்த 5 ஆம் திகதி காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபையினரால் நடத்தப்பட்டது.

இதன் இரண்டாவது கருத்தரங்கு இன்று 12 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபை மண்டபத்தில் நடைபெறும். (இ-சி

# வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை புதிய மின் கட்டணங்கள் சார்பான அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபைப் பிரதேசத்தில் 1988-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் அமுலாக்கப்படும் புதிய மின் கட்டணங்கள் மின்சாரப் பாவனையாளர்களின் கவனத்துக்காக இங்கு கீழே பிரசுரிக்கப்படுகின்றது

## (1) வீட்டுப்பாவனைக்குரிய இறுப்புக்கட்டணம்

(1) இந்த இறுப்பனவு தனியார் வசிப்பிடங்களில் மின்சாரத்தை வீட்டுப்பாவனைக்காகப் பாவிப்பவர்களுக்கும் (11) அப்படியான வீடுகளில் 25% க்கு மேற்படாத இடப்பரப்பினை (ஆகக்கூடிய 400 சதுர அடி) ஏதும் வியாபாரம் அல்லது தொழில் நோக்கத்திற்காகப் பாவிப்போருக்கும் பொருந்தும்.

[அ] மாசாந்த நிலையான கட்டணம் ரூபா -5/-ம்
[ஆ] 1-10 அலகுகளுக்கு, அலகொன்றுக்கு -/75 சதமும்
[இ] 11-100 அலகுகளுக்கு, அலகொன்றுக்கு ரூபா 1/25-ம்
[ஈ] 101-450 அலகுகளுக்கு, அலகொன்றுக்கு ரூபா 2/25-ம் அத்துடன் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் எரிபொருட் சீராக்கல் கட்டணமும்
[உ] 450 அலகுகளுக்கு மேல், அலகொன்றுக்கு ரூபா 2/75-ம் அத்துடன் எரிபொருள் சீராக்சல் கட்டணமும் அறவிடப்படும்.

மேலும்

(11) வியாபார நோக்கத்திற்காக அல்லது தொழில் நோக்கத்திற்காகப் பாவிக்கப்படும் இடப்பரப்பிற்காக (25%) மேலதிகக் கட்டணம் கீழ் வரும் விகிதாசாரப்படி அறவிடப்படும்,

200 சதுர அடி வரையும்... ரூபா 30/-
200-300 சதுர அடி வரையும்... ரூபா 40/-
300-400 சதுர அடி... ரூபா 50/-

## (2) சமய சம்பந்தமான இடங்கள், அங்கீகரிக்கப்பட்ட தர்ம ஸ்தாபனங்கள் போன்றவற்றிற்கான இறுப்பு

இவை பகிரங்க வணக்கத்தலங்கள், இத்தலங்களுக்குள் அல்லது இத்துடன் சேர்ந்துள்ள இடத்திலுள்ள பூசகரின் வசிப்பிடம், சமூகசேவைப் பணிப்பாளரினால் சான்றிதழ் வழங்கப்பட்ட தர்ம ஸ்தாபனங்கள் முதியோர் அனாதை மடங்கள், வலது குறைந்தோர் விடுதிகள் போன்றவற்றுக்கான இறுப்பாகும்.

(அ) மாதாந்த நிலையான கட்டணம் .. ரூபா 5/-ம்
(ஆ) முதல் 150க்கு அலகுகளுக்கு அலகொன்றுக்கு -/75 சதமும்
[இ] 150க்கு மேற்பட்ட அலகுகளுக்கு அலகொன்றுக்கு ரூபா 2/25ம்

எரிபொருள் சீராக்கல் கட்டணமும அறவிடப்படும்.

அல்லது

ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தர்ம ஸ்தாபனங்கள், சமய வழிபாட்டுத்தலங்கள் போன்றவற்றிற்கான 1-3-85ஆம் திகதி தொடக்கம் மீளாய்வு செய்யப்பட்ட இறுப்பின் பிரகாரம் வரையறுக்கப்படாமல் இச்சலுகையை பெற்றுவர்தவர்களுக்கு 1987-ம் ஆண்டின் சராசரி மாதாந்த நுகர்ச்சியின் அலகுகளின் அலகொன்றிற்கு சதம் -75/ம (எரிபொருள் கட்டணம் விலக்கப்பட்டுள்ளது) இச்சராசரிக்கு மேற்பட்ட அலகுகள் ஒவ்வொன்றிற்கும் ரூபா 2/25ம் அதற்கான எரிபொருட் சீராக்கல் கட்டணமும் விதக்கப்படும்.

## [3] வீதிவெளிச்சம்

பிரதேசசபையால் ஈடுசெய்யப்படும்

## [4] பொது நோக்கங்களுக்கான இறுப்பனவு

இவை சபைகள், அலுவலகங்கள், வங்கிகள் பண்டகசாலைகள், பொதுக்கட்டடங்கள், ஆஸ்பத்திரிகள், கல்வி நிறுவனங்கள், பொழுதுபோக்கு இடங்கள் போலும் இதுபோன்ற இடங்களுக்குப் பொருந்தும்

4-1. மதிப்பிடப்பட்ட தேவை 50 கே வி ஏ க்கும் குறைவான வழங்கல்களுக்குப் பொருந்துவன

(அ) ஒவ்வொரு அலகுகளுக்கும் அலகொன்றுக்கு ரூபா 2/25 ம் எரிபொருள் சீராக்கல் கட்டணமும

(ஆ) கீழ்வரும் விகிதாசாரப்படி மாதாந்த நிலையான கட்டணமும்.
5 கே. வி. ஏ. வரையும் ரூபா 30/-
5 கே. வி ஏ தொடக்கம் 10 கே வி ஏ வரையும். ரூபா 60/-
10 கே. வி. ஏ க்கு மேல் 50 கே வி. ஏ க்கு குறைய ரூபா 150/- ம் அறவிடப்படும்.

4-2 மதிப்பிடப்பட்ட தேவை 50 கே வி. ஏ க்கும் அதற்கு மேலுமுள்ள வழங்கல்களுக்குப பொருந்துவன.

(அ) அலகுகள் ஒவ்வொன்றிற்கும் ரூபா 2/15 அத்துடன் எரிபொருள் சீராக்கல் கட்டணமும

(ஆ) மாதாந்தம் பெறப்பட்ட உச்சத் தேவையின் கே. வி ஏ. ஒன்றுக்கு ரூபா 150/- வீதப்படியும்

(இ) நிலையான கட்டணம் ரூபா 300/00 ம் அறவிடப்படும்.

## [5] கைத்தொழில் இறுப்பனவு

இவை முழுமையாகவோ அல்லது பிரதானமாகவோ தொழிற்சாலைகள் தொழிற்களங்கள், வார்ப்புச்சாலைகள், எண்ணை ஆலைகள், நூற்பு நெசவு நிலையங்கள், பம்புநிலையங்கள், துறைமுக கப்பல் தங்குமிட நிர்மாணங்கள் மற்றும் இதனையொத்த கைத்தொழில் நிர்மாணங்களுக்கான மின் இரசாயன மின் இயக்க நடவடிக்கைகளுக்கு ஏற்புடையதாகும்.

5-1 மதிப்பிடப்பட்ட தேவை 50 கே. வி. ஏ.க் குறைவான வழங்கல்களுக்குப் பொருந்தும்.

(அ) ஒவ்வொரு அலகுகளுக்கும் அலகொன்றிற்கு ரூபா 2/15 அத்துடன் எரிபொருள் சீராக்கல் கட்டணமும்

(ஆ) கீழ்வரும் விகிதாசாரப்படி மாதாந்த நிலையான கட்டணமும்.
5 கே. வி. ஏ வரையும் ...... ரூபா 30/-
5 கே. வி ஏ. தொடக்கம் 10 கே. வி. ஏ வரையும் ரூபா 60/-
10 கே. வி. ஏ க்கு மேல் 50 கே வி. ஏ. குறைய ரூபா 150/-ம் அறவிடப்படும்

5-2 மதிப்பிடப்பட்ட தேவை 50 கே. வி ஏ க்கும் அதற்கு மேலுமுள்ள வழங்கல்களுக்கும் பொருந்தும்

(அ) அலகுகள் [illegible] எரிபொருள் சீராக்கல் கட்டணமும்.

(ஆ) மாதாந்தம் பெறப்பட்ட உச்சத் தேவையின் கே. வி. ஏ. ஒவ்வொன்றிற்கும் ரூபா 150/-வீதமும்.

(இ) நிலையான கட்டணம் ரூபா 300/-ம் அறவிடப்படும்.

## (6) ஹோட்டல் இறுப்பனவு

இவை உல்லாசப் பிரயாண ஹோட்டல்கள் சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் அதனையொத்த இடங்களுக்குப் பொருந்தும.

6-1 மதிப்பிடப்பட்ட தேவை 50 கே. வி. ஏ. க்கு குறைவான வழங்கல்களுக்குப் பொருந்தும்.

(அ) அலகு ஒவ்வொன்றிற்கும் ரூபா 2/25 அத்துடன் எரிபொருள் சீராக்கல கட்டணமும்.

(ஆ) கீழ் வரும் விகிதாசாரப்படி மாதாந்த நிலையான கட்டணமும்
5 கே. வி. ஏ வரையும் .....ரூபா 30/-
5 கே. வி. ஏ தொடக்கம் 10 கே. வி. ஏ வரையும்......ரூபா 60/-
10 கே வி ஏ. க்கு மேல் 50 கே. வி. ஏ, க்குக் குறைய ரூபா 150/-ம் அறவிடப்படும்.

6-2 மதிப்பிடப்பட்ட தேவை 50 கே வி. ஏ க்கும் அதற்கு மேலுமுள்ள வழங்கல்களுக்குப் பொருந்தும்.

(அ) அலகுகள் ஒவ்வொன்றிற்கும் ரூபா 2/15ம் அத்துடன் எரிபொருள் சீராக்கல் கட்டணமும்.

(ஆ) மாதாந்தம் பெறப்பட்ட உச்சத்தேவையின் கே. வி ஏ. ஒன்றுக்கு ரூபா 150/- வீதப்படியும்.

(இ) நிலையான கட்டணம் ரூபா 300/-ம் அறவிடப்படும்.

## [7] தற்காலிக மின்விநியோகம்

(அ) அலகு ஒன்றிற்கு ரூபா 3/-ம் எரிபொருள் சீராக்கல் கட்டணமும்.
(ஆ) பொருட்களின் வாடகையாக, பெறுமதியின் 10%மும்
(இ) கூலிகள், மேற்பார்வைக் கட்டணமும
(ஈ) நுகர்ச்சிக்கான ஒரு வைப்புப் பணமும் அறவிடப்படும்.
(உ) காணிவல் நடாத்தப்படும் இடங்களுக்கு கே. வி ஏ. ஒன்றிற்கு மேலதிக கட்டணம் ரூபா 50/- அறவிடப்படும்

## [8] பொது அறவீடுகள்

(1)

(அ) புதிய நிறுவுதல்களுக்கு ஏற்கனவே உள்ள நிறுவுதல்களின் விஸ்தரிப்புகளுக்கும் முதல் சோதனை இலவசம்

(ஆ) முதல் சோதனை திருப்தியளிக்கவில்லையாயின் ஒவ்வொரு மேலதிக சோதனைகளுக்கும்.
ஒரு நிலை நிறுவுதல்... ரூபா...50/-
மூன்று நிலை நிறுவுதல் ரூபா.. 150/-

(2) மானிப்பரிசோதனை

பாவனையாளரின் வேண்டுதலின் பேரில் மானிப் பரிசோதனை ரூபா 10/-

(மானியம் செம்மை இல்லாத தன்மை 2½ சதவீதத்தை விட கூடவோ அல்லது குறைவாகவோ காட்டுமேயானால் கட்டணம் திருப்பிக் கொடுக்கப்படும்)

(3) கொடுப்பனவுகளின் தாமதத்திற்கான விதிப்பனவுகள்

பாவனையாளர் ஒருவரின் மின்சார விதிப்பனவுக்கணக்குகள் 30நாட்களுக்கு மேல் நிலுவையாக உள்ள சந்தர்ப்பத்தில் அம் மின்சார விநியோகத்தைத் துண்டிப்பதற்கு கட்டளை இடப்படும் துண்டிப்புக் கட்டளை இடப்படுமுன் நிலுவைத் தொகையுடன் அதன் 10 சதவீத மேலதிகக் கட்டணமும் அத்துடன் துண்டிப்பு நடவடிக்கை எடுக்கும் கட்டணமாக ரூபா 100/00 ம் அறவிடப்படும்

(4) ஒழுங்கு விதிகளை மீறுவோர் மீது (மானிகளின் மாற்றங்கள் செய்தல், மானி முத்திரைகள், கட்டவுட் முத்திரைகளை சேதப்படுத்துதல் இவை போன்றவை) அவர்களது மின்சாரம் துண்டிக்கப்படுவதுடன் ரூபா 2000/- விதிப்பனவு அறவிடப்படும் மானியின் பதிப்படாத மின்பாவனைக்கான கட்டணம் சபையினால மதிப்பீடுசெய்யப்பட்டு அக்கட்டணத்துடன் 25% மேலதிகக் கட்டணமும் அறவிடப்படும் மதிப்பீடு முறையும் காலமும் சபையின் தன்விருப்பு உரிமையை பொறுத்தது.

(5) சட்டவிரோத மின் விஸ்தரிப்புக்களை, வேறு கட்டடங்களுக்கு [மீற்றர் மூலம்] கொடுத்தலுக்காக மேலதிகக் கட்டணமாக ரூபா 250/- அறவிடப்படும்.

(6) பாவனையாளர்களின் சொந்த விருப்பத்தின் பேரில் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டபின் மீண்டும் விநியோகம் வழங்குவதற்கு கட்டணம் ரூபா 100/- அறவிடப்படும்

(7) மின்சாரம் தடைப்படும் போது, சேவையின் உருகிழையை மீளப்பொருத்துவதற்காக
ஒருநிலைக்கு .... ரூபா 10/-
மூன்று நிலைக்கு..... ரூபா 20/- அறவிடப்படும்

இதுவிடயமாக ஏதேனும் பூரண விளக்கம் தேவையாயின் மானிப்பாய் பட்டின அலுவலகம் மானிப்பாய்க் கிராம அலுவலகம் அல்லது பண்டத்தரிப்பு பட்டின அலுவலங்களில் பெற்றுக்கொள்ளலாம் காலதாமதமாகச் செலுத்தப்படும் நிலுவைப்பணங்களுக்கு மேலதிகப் பணம் செலுத்த வேண்டியதுடன் துண்டிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட இருப்பதால் தயவுசெய்து மாதாந்த சிட்டைகள் வரும் வரையும் காத்திராமல் மாதாந்தம் தவறாமல் குறைந்தது ஒரு சராசரித் தொகையை காரியாலயத்திற்குச் சென்று செலுத்தி வருவதால் மேலே கூறிய மேலதிகப் பணமோ அல்லது துண்டிக்க வேண்டிய சந்தர்ப்பத்தையோ சுலபமாக விலக்கி கொள்ளலாம் எனவும் ஆலோசனை கூறவிரும்புகின்றேன்

**செல்வி சாந்தினி சுப்பிரமணியம்,**
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை.

நகர மண்டபம்,
மானிப்பாய்.
1-6-1988.

(C-5419)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

JUST COMMENCED

C. I. M. A./ A. A. T

[Stages I & II] [Prelim. & Inter]

★ WEEKEND CLASSES ★

விரிவுரையாளர் குழு:

V. கருணாநிதி, S. P. சிவஞானம்,
S. சிவபாலன், S பிலிப,
Mrs S. மூர்த்தி மற்றும் பலகலைக்கழக விரிவுரையாளர்கள்.

இது விளம்பரமல்ல!
அப்படியாயின் விளம்பரம் யாது???
எமது மாணவர்களின் கடந்த கால பரீட்சைப் பெறுபேறுகள் மாத்திரமே

GOOD WINE NEEDS NO BUSH

RAPID RESULTS INSTITUTE

212, கச்சேரி - நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

[44 7]


# இராமப்புற இளைஞர் மறக்கப்பட்ட சமூகமாக தம்மைக் கருதுகிறார்கள்

இராமப்புற இளைஞர்கள் தங்களை மறக்கப்பட்ட சமூகமாக நினைக்கின்றனர். அவர்களுக்கு கல்வியில், விளையாட்டில், தொழிலில் சந்தர்ப்பங்கள் மிகக்குறைவு. இதுவே கிராமப்புறங்களில் பிரச்சினை எழக் காரணமாகவுள்ளது.

கிளிநொச்சி ஆரத்தினபுரம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க சிறுவர் பாடசாலைத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய கிளிநொச்சி, வவுனியா மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. ஏ. எஸ் குணரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

ஆரத்தினபுரம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவியும் பாடசாலை ஆசிரியையுமான திருமதி இ. பவளகாந்தன் தலைமையில் வைபவம் நடைபெற்றது.

திருவையாறு கிராம சேவகர் திரு. க. தர்மலிங்கம் கலந்துகொண்டு பாடசாலையைத் திறந்து வைத்தார்.

கிளிநொச்சி உதவி இளைஞர் சேவை உத்தியோகத்தர் செல்வி ஏ. வஜா ஸ்கந்தபுரம் இளைஞர் சேவை உத்தியோகத்தர் செல்வி எவ். பெலிசிற், இரத்தினபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் சார்பில் திரு ஏ. அரியநயகம் ஆகியோரும் உரையாற்றினர்,

திருமதி வ மோகன் நன்றி கூறினார். (இ-76)

# நியமனக் கடிதங்களைபெற்றனர்

யாழ்ப்பாணம், ஜூன் 12

வ பகுதிக்கான கஷ்டப் பிரதேச கணித, விஞ்ஞான ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்கள் யாழ் கல்வித் திணைக்களத்தில் வைத்து வழங்கப்பட்டன.

இந்த நியமனக் கடிதங்களையாழ் பிரதம கல்வி அதிகாரி திரு கு சோமசுந்தரம் உரியவர்களிடம் வழங்கினார்.

போதிய கால அவகாசத்தில் அறிவித்தல் கொடுக்கப்படாத போதிலும் ஒரு சிலர் தவிர அனைவரும் நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொண்டனர்.

இவ்வாறு நியமனம் பெற்றவர்களில் அநேகமானவர்கள் கடந்த 5 வருடங்களுக்கு மேலாக வசதிக் கட்டண ஆசிரியர்களாக கடமையாற்றி வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-9)

# நற்கருணை வழிபாடு

மயிலிட்டி, ஊறணி புனித அந்தோனியார் ஆலயத்தில் இன்று 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை நற்கருணை வழிபாடும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும். நாளை திங்கட்கிழமை காலை திருநாள் பாடல் கூட்டுத் திருப்பலியும் திருச்சொரூப ஆசிர்வாதமும் நடைபெறுவதுடன் வருடாந்த உற்சவம் நிறைவடையும் என்று மயிலிட்டி, ஊறணி பங்குத் தந்தை வண பிதா பீற்றர் துரைரத்தினம் அறிவித்துள்ளார்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்:
18 08 1918

மறைவு:
13 05 1988

**திருமதி தங்கரட்ணம் சுப்பிரமணியம் (சின்னத்தங்கம்)**

அன்பாயும், பண்பாயும் அரவணைத்து ஆதரித்த அன்பு அம்மா! எம்மையெல்லாம் துயரத்திலாழ்த்தி இறைவனடி சேர்ந்த உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

மருத்துவமனையில் நோயுற்று இருந்த சமயம் பலவித உதவி புரிந்தவர்களுக்கும், இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு எமது கவலையில் பங்குகொண்டவர்களிற்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோரிற்கும், எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மக்கள்.

அண்ணாமலை வீதி,
சுதுமலை,
மானிப்பாய். (4410)

## காலாண்டு நினைவு அஞ்சலி



**மயில்வாகனம் முரளிக்கிருஷ்ணா**

தாயின் மடியில்: 17-8-1967
தாயக மண்ணில்: 14-3-1988

திதி 12 - 06 - 1988


அன்றொரு நாள் உன் தந்தை மயில்வாகனம் வங்கிக் கடமைக்கு பஸ்சில் செல்லுகையில் வெறிகொண்டு வந்த காவல் படையினரால் வரிசையாய் நிறுத்தியே கோரமாய் சுடப்பட்டார் என் கணவர் பிரிந்தாலும் மகனிருவர் ஆறுதலால் மனம் தேறியுங்களை வளர்த்து வந்தேன். திறமைச் சித்தியுடன் உயர்தரத்தில் படித்த நீர் தமிழ் மக்கள் விடிவுக்காய் வீரப் போராளியானாய் வீட்டிற்குத் தம்பியுள்ளான் நாட்டிற்கு நான் போறேன் என்றென்னைத் தேற்றி விட்டுப் போய்விட்டாய் காட்டிக்கொடுக்கும் கயவர்கள் மோசடியால் காலையிழம் பொழுதில் நீ வளைக்கப்பட்டபோது காத்திருந்தோர் கைகளிலே உன்னுடலை விட்டு விட்டுத் தமிழன்னை மடியினிலே உன்னுயிரை அர்ப்பணித்தாய் எம தருமை முரளிக்கிருஷ்ணா என்னுயிர் மறைந்தாலும் உடல் எரிந்தாலும் எம் நினைவுள்ளவரை உம் நினைவு மறந்திடுமா!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உன் பிரிவால் துயருறும்
அம்மா, தம்பி,
உறவினர், நண்பர்கள்.

''தணிகை''
நெல்லியான் வீதி,
சுழிபுரம். (4107)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அர்ச்சுனா**
**சதாசிவம். தமிழரகவரன்**

தமிழ் மண்ணில் 4- 4- 1960 தமிழ் மண்ணிற்கு 12- 6- 1986

வீரத்திரு விழிப்பார்வையுடன் வெற்றி
வாகை பல சூடி — இனத்தின்
பாரத்தைப் பொறுப்புடன் ஏற்றுப்
போராடி
நேரத்தே பகைவர் தம்மைத் தரையில்
வீழ்த்திய வேளைதனில் வீரமரணமடைந்த
வேங்கைகளே!
ஓய்ந்தே ஒதுங்கவில்லை, ஒளியவில்லை
ஓபவும் இல்லை உங்கள் திருக்கூட்டம்
இன்றும் ஆடுகிறார் போராட்டம்
தீரத்தில் தேர்ந்த செம்மல்களே உங்கள்
வீரத்தை உலகே வியப்புடன்
போற்றுதே
சேரவேண்டிய தமிழ் மண்ஆட்சி எமது
கைக்குச்சேர்ந்தேயாகும்
தூரத்தில் இல்லையது துயரம் எமக்கில்லை
காரணத்துடன் செய்யும் கடுந்தவ வேள்வி
கண்டுவருகிறது வெற்றி.

குடும்பத்தவர்கள்

சி தா. சதாசிவம்
46 அத்தியடி வீதி,
யாழ்ப்பாணம். (4384)

## 3 ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
09 02 56

அநியாய
அழிப்பு:
17 - 05 - 85

திதி
12 06 88

**திருமதி தருமசோதி அமிர்தலிங்கம்**

[ ணக்கு பதிவாளர் கல்வித்திணைக்களம்,
அனுராதபுரம்]

ஆண்டுகள் மூன்று சென்றாலும் ''அன்பே'' உனை மறப்பாமோ உள்ளம் உள்ளவரை உன் நினைவிருக்கும் உம்மைப் பிரிந்து உமது ஆத்ம சாந்தியை என்றும் பிரார்த்திக்கும்.

நயனமார் கட்டு குடும்பத்தினர்.

(4415)

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் செ. இராசகுமாரன் (வவி)
( உரிமையாளர்)

## ஈராண்டு நினைவஞ்சலி



அமரர் சி. அழகரட்ணம்
(இளைப்பாறிய தபால் அதிபர்)

சுதுமலை

ஆண்டவன் படைப்பு: 7 02 947
அநியாய அழிப்பு: 5 05- 1987

அன்னையின் மடியில்: 23 10 1926
ஆண்டவன் அடியில்:- 01- 07- 1986

திதி:- 12- 06- 1988

ஆண்டொன்று [illegible] சாயவில்லை [illegible] விலை [illegible] குறைந்து [illegible] [illegible] அந்திநிலவை [illegible] உறை விடமே [illegible] உறைவிலக்கணக் குன்றே [illegible] ஓவியமே என்றும் [illegible]

உம் பிரிவால் துயருறும்
அம்மா, சகோதர, சகோதரிகள்,
மைத்துனர்மார், மைத்துனி
மக்கள், மருமக்கள்,
ஊற்றூர், உறவினர்

(4134)

இரண்டு ஆண்டு கழிந்தாலும்
புரண்டு விழுமுங்க ளெண்ணம்
அருவாய் ஆளும் எங்கள்முன்
உருவாய் நிற்கும் ஐயா
வாழ வைத்தீர் கோபுரமாய்
ஆழப் பதித்தீர் அன்புதனை
நிலையிழந்த கொடியானோம்
உலை யிலிட்ட மெழுகானோம்
செய்வதறியாமல் தையிழந்த கைம்பெண்ணாய்
பெய்த் தாதையிலாப் பிள்ளைகளாய்
பாரில் எம்மை வாடவிட்ட
காரணம் தானறியோ ஐயா
அப்பாவென நாங்கள் இனி
எப்போது அழைப் பதுவோ!
உங்கள் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கும்.

உங்கள் அன்பு,
[illegible]
ஊற்றூர், உறவினர்


- எவர்விஷன் -

உங்கள் மங்கள வைபவங்களை கம்பியூட்டர் மயமாக்கப்பட்ட, குறைந்த வெளிச்சத்திலும் சிறந்த முறையில் படமாக்கும்—

வீடியோ கமறுக்கள் வீடியோ மிக்ஷர்கள்

மூலம் பலவருட அனுபவம் பெற்றவர்களால் சிறந்த முறையில் படமாக்கி கொள்வதற்கும்

ஸ்டில் கலர் படங்கள் எடுப்பதற்கும்

ஐந்தே நாட்களில் உங்கள் கலர்ப்பட சுருள்களை மிகச் சிறந்த முறையில் ஒரு பிரதி ரூபா 4/50 இற்கு கொழும்பில் கழுவி பிரதி செய்துதருவதற்கும்

T. V டெக், வீடியோ கமறு, கல்குலேற்றர் பற்றரியில் இயங்கும் டியூப் லைற்ஸ், றேடியோ கசற் பிளேயர்கள் எலக்ரோனிக் கைக்கடிகாரங்கள், சுவர் மணிக்கூடுகள்

மற்றும் சகல மின்னணு உபகரணங்களும் சிறந்த வகையில் திருத்தம் செய்து கொள்வதற்கும்

நீங்கள் நாடவேண்டிய இடம்:

எவர்விஷன்

21 A, மணிக்கூண்டு வீதி,
யாழ்ப்பாணம்.

[C5422]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக் கொளல்

**பொருள்:**

பகைவராக உள்ளவரைப் பொருந்துமாறு சேர்த்துக் கொள்ளல், நண்பர்க்கு உதவியானவற்றைச் செய்தலை விட விரைந்து செய்யத்தக்கதாகும்.

உதயன்
உண்மை - அநுராகம் - நடுநிலைமை
இல-298/1 தானனரி வீதி, தொலைபேசி 24808
யாழ்ப்பாணம். 23078
12-06-1988 தபா. இல 88

## லலித்தின் அழைப்பு!

மக்கள் விடுதலை முன்னணியினர் தேசிய நீரோட்டத்தில் கலந்து கொள்வதற்கு இன்னும் காலம் பிந்திவிடவில்லை. தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி நாடாளுமன்றத்தில் வைத்து இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

மக்கள் விடுதலை முன்னணியினருடன் (ஜே. வி. பி) ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டு விட்டதாக அறிவித்தவர் அமைச்சர் லலித். ஜே. வி. பி யினர் மீதான தடையைத் தாமாகவே நீக்குவதற்காக அரசு நடத்திய நாடகமா அல்லது சரகர் ஒருவரால் அரசு ஏமாற்றப்பட்டதா என்ற சரியான விளக்கம் எதுவும் தெரிவிக்கப்படாத நிலையில், அந்த ஒப்பந்தம் பொய்த்துவிட்டது வெறும் ஏமாற்று வித்தையாகி விட்டது. முழுக்க முழுக்க ஒரு புரளியானது.

ஜே. வி. பி. யினர் வன்செயல்களைக் கைவிடவும், ஆயுதங்களைக் கையளிக்கவும் அந்தப் புரளி ஒப்பந்தம் வகை செய்த போதிலும், அது கைச்சாத்தான பின்னர் ஜே. வி. பி. யினர் தரப்பில் வன்செயல்கள் அதிகரித்தன. மேற்கு, மத்திய, தெற்கு மாகாண சபைத் தேர்தல்களின் போது வன்செயல்கள் மேலும் தீவிரமாக முடுக்கிவிடப்பட்டிருந்தன.

எனினும் ஜே. வி. பி. மீதான தடை நீக்கம் தொடர்ந்து அமுலில் உள்ளது. அவர்களை ஜனநாயக அரசியலுக்கு அழைப்பதற்காகக் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

அதனை வலியுறுத்தும் விதத்தில் ஜே. வி. பி யினர் தேசிய நீரோட்டத்தில் சேர்வதற்கு இன்னமும் காலம் பிந்தவில்லை என்று லலித் கூறியிருக்கிறார்.

ஜே. வி. பி யினரின் வன்செயல்களை அடக்குவோம், அவர்களை ஒடுக்குவோம், பயமுறுத்தல்களுக்கு அஞ்சமாட்டோம் என்று வீரம் பேசிய அரசாங்கம் -

ஜே. வி. பி யினரை சமாதானத்துக்கு அழைக்கவும், ஜனநாயக வழிக்குத் திருப்புமாறும் கேட்டுக் கொள்ளும் அளவுக்கு -

படி இறங்கி நிற்பது தெளிவாகத் தெரிகிறது.

நாட்டின் எந்தப் பகுதியாக இருந்தாலும் சரி, அமைதி நிலவ வேண்டும். மக்கள் நிம்மதியாக வாழவேண்டும். பாதுகாப்பாக வாழவேண்டும். மக்களின் ஜனநாயக உரிமைகள் அடிப்படை மனித உரிமைகள் பேணப்பட்டு, நிலைநாட்டப்படவேண்டும் என்பதில் கருத்து வேற்றுமை இல்லை.

வன்செயல்கள், குழப்பங்கள், உயிராபத்துக்கள் காரணமாக, மக்கள் வாழ்க்கை குழம்பாத சீராக இருக்கப் பார்த்துக் கொள்வது ஓர் அரசாங்கத்தின் கடமையாகும்.

அந்த வகையில், ஜே. வி. பி யினரை, வன்செயல்களைக் கைவிட்டு, தேசிய நீரோட்டத்தில் சேர்ந்து, ஜனநாயகப் பாதைக்குத் திரும்புவதற்கு அரசு சந்தர்ப்பம் வழங்குவதும், தூண்டுதல் செய்வதும் நியாயமானதே.

ஆனால் வடக்கு கிழக்கு வாழ் தமிழ்பேசும் மக்கள் அமைதியாக, நிம்மதியாக வாழவேண்டும் என்பதில் ஸ்ரீலங்கா அரசுக்கு அக்கறை இல்லை என்பது நிரூபிக்கப்பட்டு வருகிறது.

தானே குழப்பங்களை விளைவித்து, தமிழர்களை அழித்தொழிக்க, அடக்கி ஒடுக்க முனைந்து நின்ற அரசு, தமிழர் நல்வாழ்வைக் கருதில் கொள்ளும் என்று எதிர்பார்க்க முடியாது தான்!

ஜே. வி. பி யினர் மீதான தடையை நீக்கியதுபோல, தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க அரசு நினைக்கவில்லை. அவ்வாறு செய்து இந்திய முலமாவது தமிழ்ப் பகுதிகளில் அமைதியை நிலைநாட்ட நினைக்கவில்லை.

இப்போதைய அரசியல் சூழ்நிலை எதுவாக இருந்தாலும், ஸ்ரீலங்கா அரசுக்கு சிங்கள மக்களைப்பற்றியும் அவர்களது பாதுகாப்பைப் பற்றியும், உரிமைகளைப் பற்றியுமே அக்கறை. தமிழர்களைப் பற்றியோ, அவர்களும் இந்த நாட்டு மக்கள் என்றோ அதற்கு எவ்வித அக்கறையும் இல்லை என்றே நிரூபணமாகிறது?

எனவே, தமிழர்கள் தமக்கெனத் தனியாட்சி அதிகாரம் கேட்பதில் என்ன தவறு? அதற்காகப்போராடுவதில் ஏது பிழை? இந்தக் கேள்விகளை அலசி ஆராய்ந்து முடிவு செய்து தமிழர்களுக்கு உதவுவது சர்வதேசங்களின் கடமை அவை இதனை உணருமா?

### அதிபர், மாணவர் காயம்

கொழும்பு, ஜூன் 12

வெள்ளவாயா பகுதியில் ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்கள் மீது பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

அச்சம்பவத்தில் வெள்ளவாய மகாவித்தியாலய அதிபர் ஏ. எம். அபயக்கூன் மாணவரான லப்னல் குமாரசிங்கா ஆகியோர் காயம் அடைந்தனர். (ஒ-எ)

# நிக்கரகுவா அமைதிப் பேச்சு தோல்வியில் முடிந்தது!

## ஆயுத உதவி தரும்படி அமெரிக்காவுக்கு 'கொன்ரு' வேண்டுகோள்

மனகுவா, ஜூன் 11

ஆயுத உதவி தந்து எம்மைக் காப்பாற்றுங்கள் இப்படி கொன்ரு கிளர்ச்சிக்காரர்கள் அமெரிக்க அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்-

நிக்கரகுவா அரசு கொன்ருகிளர்ச்சிக்காரர் பேச்சுக்கள் தோல்வியில் முடிந்து விட்டன.

அதைத் தொடர்ந்து கொன்ருக் கிளர்ச்சிக்காரர் தலைவர், அதிபர் றேகனுக்கு இந்த அவசர வேண்டுகோளை விடுத்திருக்கிறார்

இறுதிக்கட்டப் பேச்சுக்களின் போது கொன்ருப் பிரதிநிதிகள் புதிய கோரிக்கைகளை அரசு தரப்பினருக்குவிடுத்தனர்.

சுதந்திரத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்; உயர் நீதி மன்றத்துக்கு புதிய நீதியரசர்கள் நியமிக்கப்பட வேண்டும் —இப்படி கொன்ருப் பிரதிநிதிகள் கோரினர்.

அரசு தரப்பினர் இவற்றை நிராகரித்தனர்.

பேச்சுக்கள் தோல்வி கண்டாலும் உடனடியாக ஆயுதக்கிளர்ச்சியை ஆரம்பிக்கப் போவதில்லை என்று கொன்ரு கிளர்ச்சியாளர் அறிவித்துள்ளனர்.

இதனிடையில் அமெரிக்காவுக்கு விடுத்த வேண்டுகோளில் "ஆயுத உதவி தராவிடில் எம்மை அரசு துருப்புக்கள் அழித்து விடுவர்" என்று கொன்ருக் கிளர்ச்சியாளர் தெரிவித்துள்ளனர். (எ)

### மனித உரிமை கோரி

# சீனுவில் மாணவர் ஆர்ப்பாட்டம்; பொலீஸார் தடுத்து நிறுத்தினர்

பீகிங், ஜூன் 11

மனித உரிமைக்கு உத்தரவாதம் கோரி சீனபல்கலைக்கழக மாணவர் நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலத்தைப் பொலீஸார் தடுத்து நிறுத்தினர்.

அமர்ந்திருந்து இயக்கம் ஒன்றை நடத்த பல்கலைக்கழக மாணவர்முன்னர் தீர்மானித்து இருந்தனர்.

அதன்படி மாணவர் ஊர்வலமாக நகர மத்தியில் உள்ள சதுக்கத்துக்கு வந்தனர். நூற்றுக்கு மேற்பட்ட பொலீஸார் மாணவரைத் தடுத்து நிறுத்தினர் அதற்கு முன்னர் ஒலிபெருக்கிமூலம் எச்சரிக்கப்பட்டது.

## தென் ஆபிரிக்க அரசின் இன்றைய நிலை!

லண்டன், ஜூன் 11

ஆபிரிகத் தேசிய காங்கிரஸ் தலைவர் ஒலிவர் தம்போ, பிபிசி வானொலிக்கு பேட்டியளித்தார்.

தென் ஆபிரிக்காவில் நிறவேற்றுமை முடியும் காலம் வந்து விட்டது

வெள்ளை இனத்தவர் நிறவேற்றுமையை 1961 இல் கொண்டுவந்தனர். அப்போது நிறவேற்றுமை என்றும் இருக்கும் என்று அவர்கள் நம்பினர். இப்போது அந்த நம்பிக்கையை அவர்கள் இழந்து விட்டனர் நிறவேற்றுமைக்கு உலகில் தோன்றியுள்ள எதிர்ப்பு தென் ஆபிரிக்க ஆட்சியாளரை கலங்க வைத்திருக்கின்றது

நிறவேற்றுமையை எப்படிக் கைவிடுவது என்பது தான் இன்று தென் ஆபிரிக்க ஆட்சியாளரை எதிர்நோக்கியுள்ள பிரச்சினை.

இப்படி திரு ஒலிவர் தம்போ பிபிசி பேட்டியில் தெரிவித்தார். (எ)

### வெளி உலகில்

## பனமா இராணுவத் தளபதியின் ஆதரவாளர் அமெரிக்கா வரத்தடை!

வாஷிங்டன், ஜூன் 11

பனமா இராணுவத் தளபதி ஜெனரல் நொரியாகோவின் ஆதரவாளர் எவரும் அமெரிக்காவினுள் நுழைய அனுமதிக்கப்படமாட்டாது

இப்படி அதிபர் றேகன் உத்தரவிட்டிருக்கிறார்

பனமாவில் ஜெனரல் நொரியாகோவைப் பதவியில் இருந்து விலக்க அமெரிக்கா துவரை கொடுத்துவந்த நெருக்கடிகள் தோல்வி கண்டு விட்டன.

இந்த நிலையில் நொரியாகோவின் ஆதரவாளர்கள் அமெரிக்கா வருவதற்கு அதிபர் றேகன் தடை விதித்துள்ளார். (எ)

# சோவியத் யூனியனில் மாநிலத்தகராறு தொடருகிறது!

சோவியத் யூனியனின் ஆர்மெனியா, அஸர்பைஜன் மாநிலங்களுக்கு இடையேயான பிரதேசத் தகராறு மீண்டும் உக்கிரமாக உருவெடுத்துள்ளது என்று அறிவிக்கப்படுகிறது.

அரசு நாளிதழான 'பிராவ்தா' வில் இச்செய்தி வெளியிடப்பட்டது.

காபாக் பிரதேசத்தை அஸர்பைஜானில் இருந்து பிரித்து எடுத்து ஆர்மெனியாவுடன் சேர்க்க வேண்டும் என்று கோரி, ஆர்மெனியா மக்கள் சில மாதங்களுக்கு முன்னர் பெரிய அளவில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்

சுமார் 30 பேர் அப்போது உயிரிழந்தனர். பின்னர் ஒருவாறு அது தணிந்தது.

மீண்டும் ஆர்மெனியாவில் ஆர்ப்பாட்டங்கள் தினமும் நடைபெற்று வருவதாக 'பிராவ்தா' அறிவித்துள்ளது.

## ஷியா தலைமையில் காபந்து அமைச்சரவை

இஸ்லாமாபாத், ஜூன் 11

பாகிஸ்தான் ஜனாதிபதி ஷியா - உல் ஹக் தனது தலைமையில் காபந்து அமைச்சரவை ஒன்றை நேற்று அறிவித்தார்.

முகமட்கான் ஜுனேஜோ தலைமையிலான அமைச்சரவை, நாடாளுமன்றம், மாநில சட்டசபைகள் ஆகியவற்றைக் கலைத்து பதினைந்து தினங்களின் பின்பு காபந்து அரசு ஒன்றை ஜனாதிபதி ஷியா அமைத்திருக்கிறார்.

வெளியுறவு அமைச்சராக ஜனாப் யகூப் ஜான் நியமிக்கப்பட்டார். (ஒ-எ)

## கூட்டுச் சேர்வது பற்றி தேர்தல் திகதி தெரிந்த பின்னரே முடிவாகும்

தமிழக சட்டசபைத் தேர்தலுக்கு திகதி நிர்ணயிக்கப்பட்டபின்னரே எந்தக் கட்சியுடன் கூட்டுச் சேர்வது என்பது குறித்து ஆராயப்படும்.

இவ்வாறு தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் ஜி கருப்பையா மூப்பனார் கூறினார்.

தமிழக அரசியல் நிலைமை பற்றி புதுடில்லியில்தங்கியிருந்தபோது பிரதமர் ராஜீவ்காந்தி உட்பட முக்கிய கட்சிப் பிரமுகர்களுடன் பேச்சுக்கள் நடத்தியிருந்தார்.

சென்னை திரும்பியவுடன் திரு மூப்பனார் செய்தியாளர் மத்தியில் பேசினார். அப்போது அவர் சொன்னதாவது -

எந்தக் கட்சியுடன் தேர்தல் கூட்டு வைத்து தமிழ்நாட்டில் போட்டியிடுவது என்பதுபற்றி இந்திரா காங்கிரஸ் தலைமைப் பீடம் தான் முடிவு செய்யும்.

தமிழ்நாட்டுச் சட்டசபைத் தேர்தலுக்குத் திகதி நிர்ணயிக்கப்பட்ட பின்னர்தான் கூட்டுப் பற்றி இந்திரா காங்கிரஸ் தலைமைப்பீடம் ஆராயும்

இப்படி திரு. மூப்பனார் சொன்னார் (ஒ-எ)

### நகரசபை அலுவலகம் மூடப்பட்ட நிலையில்

பருத்தித்துறை நகரசபை அலுவலகம் தொடர்ந்து மூடப்பட்டிருக்கிறது.

கடந்த முதலாம் திகதி பருத்தித்துறையில்இடம்பெற்ற சம்பவங்களை அடுத்துப் பல பகுதிகளிலும் மக்கள் தாக்குதலுக்கு ஆளானார்கள்

பருத்தித்துறை நகரசபை அலுவலக ஊழியர்கள் சிலரும் இதில் அடங்குவர்.

இது தொடர்பாக யாழ். உள்ளூராட்சிச் செயலகத்துக்கு அறிவிக்கப்பட்டிருப்பதுடன் நகரசபை அலுவலக ஊழியர்கள் பலரும் கடமைக்குச் செல்லாது இருந்துவருகின்றனர். (இ-160)

### கர்ப்பிணி தாய்மாருக்கு ஒரு போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 12

கர்ப்பிணித்தாய்மார்கள், குழந்தைகளுக்கான சுகாதாரப் போட்டி ஒன்றை "யுனிசெப்" ஸ்தாபன உதவியுடன் யாழ் மாநகராட்சி சுகாதாரப் பகுதி மேற்கொள்ள உள்ளது

இப்போட்டி பேஷாக்கு நிலை, தடுப்பூசி ஏற்றல் என்பனவற்றின் அடிப்படையில் நடத்தப்படும்.

### ஐஸ்கிறீம் விற்கத் தடை

அனலைதீவு ஜூன் 12

நயினாதீவு நாகபூஷணி அம்மன் வருடாந்த உற்சவ காலத்தில் மேற்படி ஆலய சுற்றுடலில் ஐஸ்கிறீம் விற்பது தடை செய்யப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி இதனை அறிவித்துள்ளார். [இ-18]

# புரிந்துணர்வு இல்லாததே பிணக்குகளுக்கு காரணம்

## தியாகி கந்தசாமி நினைவு தினக் கூட்டத்தில் உரை

வட்டுக்கோட்டை, ஜூன் 12

வல்லரசுக்கள் தங்கள் ஆயுதங்களை விற்பனை செய்வதற்காக குழப்பங்களை ஏற்படுத்தி வருகின்றன. அமெரிக்கா என்ற நாடு இருக்கும் வரை உலகில் அமைதி என்பது ஏற்படவே மாட்டாது. போராட்டங்களும் குழப்பங்களும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டே இருக்கும் மக்கள் மத்தியில் புரிந்துணர்வு இல்லாதமையே பிணக்குகளுக்கு காரணம் ஆகும்.

வட்டுக்கோட்டை மூளாய் றோட்டில் உள்ள ஊளாதி தோட்டத்தில் தியாகி கந்தசாமிஞாபகார்த்தக் கூட்டம் நடைபெற்றது.

"உலக சமாதானத்தைப் பேணுவதற்கு ஸ்தாபன ரீதியான முயற்சிகள்" என்னும் பொருளில் சிறப்புரையாற்றிய யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு. எஸ். சண்முகராசா மேற்கண்டவாறு கூறினார்.

திரு எஸ் சண்முகராசா தொடர்ந்து உரையாற்றும் போது கூறியதாவது:- மனித வரலாற்றில் எந்த இடத்திலும் ஆயுதப் போராட்டம் நடைபெறாமல் இல்லை இதற்கு புரிந்துணர்வு இல்லாமையே காரணம்

ஆண்டவன்- அடிமை உயர்ந்தோர்- தாழ்ந்தோர் ... என்ற பாகுபாடு இல்லாமல் பிணக்குகள் உண்டாகாது வழக்கம் ஆயுதம் ஏந்திய பிணக்குகளை பிணக்குகள் என்று சொல்லமுடியாது.

பலதரப்பட்ட பிணக்குகளினால் மூன்றும் உலக மகா யுத்தநிலைமை எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறோம் யுத்தத்திற்கான ஆயத்தங்களும் நடைபெறுகின்றன யுத்த நிறுத்த முயற்சிகளும் நடைபெறுகின்றன.

இலங்கைப்போராட்ட வரலாற்றில் தியாகி கந்தசாமி நீங்காத நினைவுடையவராகத் திகழ்கின்றார்.

இப்படி அவர் கூறினார்.

கூட்டம் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி முன்னாள் உப அதிபர் திரு. கு. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

திருமதி ஞானம் செல்வராசா மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார்.

திரு. எஸ். குணரத்தினம் தியாகி கந்தசாமியின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிந்தார்.

செல்வன் க. இராஜகுமார் வரவேற்புரை நிகழ்த்தினார்.

செல்வங்கள் செ. நவநிதி, ப. ஜெயசகதி ப. ஜெயகௌரி, அ. கலைச்செல்வி, மை. தயாளினி தே. யாழினி ஆகியோர் இசைவிருந்தளித்தனர்.

இசைவிருந்து சகலரையும் ஆனந்தத்தில் ஆழ்த்தியது.

"உலக புரட்சிகளும் அதன் தாக்கங்களும்" என்னும் பொருளிலதிரு வி. அற்புதரத்தினமும், காணி நிலம் வேண்டும் என்னும் பொருளில் திருமதி சுதி குகதாசனும் தொழிலாளர் வர்க்கப் போராளிகளின் முன்னோடி கந்தசாமி, என்னும் பொருளில் திரு. வி. ஏகாம்பரமூர்த்தியும் உரையாற்றினர்.

திரு சி. கனகசபாபதி நன்றி கூறினார். [இ-161]

### மெய்கண்டான் மணிவிழா

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய 'மணிவிழா' சிவநெறிக் காவலர் திரு சோ. க. வேலாயுதர் தலைமையில் இன்று 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் நடைபெறவுள்ளது

யாழ் கல்வித் திணைக்கள நிர்வாக அதிகாரி திரு கா சந்திரராசா வித்தியாலயக்கொடியை ஏற்றி வைப்பார்கள்.

கல்வி அதிகாரி திரு. பசுபதிமுருகராசா மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பார்.

பண்டிதை பொன். பாக்கியம் வரவேற்புரையும் அதிபர் ஆ. ஆராசநாயகம் தொடக்கவுரையும் நிகழ்த்துவார்கள்.

காரைநகர் யாழ்ரன் கல்லூரி அதிபர் திரு செ. பத்மநாதன், சுழிபுரம் கொத்தணி அதிபர் திரு. கே. கே. நடராசா ஆகியோர் ஆசியுரை வழங்குவார்கள். [இ-161]

## நாகதம்பிரான் கோயில் வருடாந்த பொங்கல்

### விசேஷ பஸ்கள சேவையில்

புளியங்குளம் ஜூன் 12

புதூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் நாளை 13 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும்.

பக்தர்களின் வசதி கருதி வவுனியா, பன்னூர், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஆகிய சாலைகளிலே இருந்து இ. போ. ச. சேவையை நடாத்த உள்ளது.

உற்சவத்தைச் சிறப்பாக நடாத்துவதற்கு வேண்டிய சகல நடவடிக்கைகளையும் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரும் நெடுங்கேணி பிரிவு உதவி அரசாங்க அதிபரும் மேற்கொண்டுள்ளனர். (இ)

### வருடாந்த மகோற்சவம்

காரைநகர் ஸ்ரீ சிவகாமி அம்பிகா சமேத சிவசிதம்பரேஸ்வரர் கோவிலின் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

இதனைத் தொடர்ந்து பதினைந்து திருவிழாக்கள் நடைபெறும். (இ-73)

### உற்சவம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 12

வண்ணார் பண்ணை வடகிழக்கு அலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான அலங்கார உற்சவம் நேற்று ஆரம்பமாகியது 12 தினங்கள் உற்சவம் நடந்து.

இறுதி நாள திருவூஞ்சலும் வைரவ சாந்தியும் நடைபெறும். (இ)

### தமிழ்ப்பகுதி தேர்தல் எப்போது?

கொழும்பு ஜூன் 12

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான தேர்தல் ஆகஸ்ட் அல்லது செப்டம்பரில் தான் நடத்தப்படக் கூடியதாக இருக்கும்.

கொழும்பில் உள்ள இந்திய ராஜ தந்திரிகள் இவ்வாறு தெரிவித்தனர் என்று பி பி சி செய்தியாளர் மார்க்டலி அறிவித்தார். (ஒ-எ)

### சம்பந்தர் குருபூசை

மண்டைதீவு, ஜூன் 12

மண்டைதீவு தெற்கு முகப்புவயல் முருகன் ஆலய மண்டபத்தில் கடந்த 2 ஆம் திகதி வியாழக்கிழமை திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் குருபூசை நடைபெற்றது

மண்டைதீவு சைவ வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு ச. சிவப்பிரகாசம் தலைமையில் பூசை இடம்பெற்றது

(ஒ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேட்டிங், சூட்டிங்ஸ்
குழந்தைகளுக்கான ஆடைகள்
சகல விதமான றெடிமேட்
ஆடைகளுக்கும்
யாழ்நகரில்
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, யாழ்நகர்.

# உதயன்

12 - 06 - 1988 ஞாயிற்றுக்கிழமை

திருமண வைபவங்களுக்கேற்ற
மணிப்புரி
பெனாரஸ்
காஞ்சிபுர
சேலைகளைப் பெற்றுக்கொள்ள
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, யாழ்நகர்.

கம்பி ஆணி/பிணைச்சல்
சகல அளவுகளிலும் உண்டு.
மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்பு:
விற்பனை முகாமையாளர்
M.S. இண்டஸ்ரீஸ்
இருபாலை வீதி, கோண்டாவில்
(4406)

வெளிவந்துவிட்டது!
லங்கா ராணி அருளர்
(இரண்டாம் பதிப்பு)
ஈழப் போராட்டத்தின் சரித்திர சம்பவங்களை
நாவலுருவில் வெளிக்கொணர்ந்த
முதலாவது படைப்பு
வெளியீட்டாளர்கள்: வெளியீட்டுக் குழு
ஈழப்புரட்சி அமைப்பு (ERO)
கிடைக்குமிடம்:
பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம். (4409)

## மினி சினிமா உரிமையாளர்களின் கவனத்திற்கு


யாழ் மாவட்டத்தில் உள்ள சகல மினி சினிமா உரிமையாளர்களின்

கலந்துரையாடல் ஒன்று

நாளை 13-06-1988 திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி யாழ் திரையரங்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தயவுசெய்து தவறாது யாவரும் கலந்துகொள்ளவும்.

அமைப்பாளர்கள்
[4426]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



செ. ஞானசேகரன்
(கப்டன் ஹரேந்திரன்)

அன்னையின் மடியில்: 13-12-1967
அநியாய அழிப்பு: 13-05-1988

தமிழீழம் மீட்கப் புறப்பட்டு எல்லை காத்து நிற்கும் இளம் வீரர்களில் ஒருவனாயிருந்து, வீர சாகசம் புரிந்த, தமிழீழ மண்ணுக்கு உன்னையே உரமாக்கிய உன் தியாகத்தை போற்றும் அதேவேளை, உன் பாசத்தால் பரிதவிக்கின்றோம்.

உமது தமிழீழ லட்சியம் இனிது நிறைவேற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உன் அன்புள்ள,
அப்பா அம்மா தம்பிமார், தங்கைமார்
மாமன்மார், மாமிமார் நண்பர்,
மற்றும் உறவினர்.

வல்வை. [4258]

## தடுப்பு ஏற்பாடு..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

வாக்க உத்தியோகத்தர்கள் சிலரும் நேற்று அந்தப் பகுதிகளிற்கு விஜயம் செய்திருந்தோம் — அத்துடன் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் பலவற்றையும் மேற்கொண்டோம்.

இந்நோய்க்கான தடுப்பூசிகள் எதுவும் எம்மிடம் கைவசம் இல்லை — இந்த நிலையை யாழ் அரச அதிபருக்கு நாம் எடுத்துரைத்தோம். இதனை அடுத்து விசேட ஏற்பாட்டின் பேரில் விமானமூலம் தடுப்பூசிகளை கொழும்பிலிருந்து பெற்றுத்தர அரச அதிபர் இணங்கியுள்ளார்.

இந்த தடுப்பூசிக்கான மருந்துகள் அடுத்த செவ்வாயன்று இங்கு வந்து சேரும்.

கன்னொருவ ஆராய்ச்சி நிலையத்திலிருந்து பரிசோதனைப் பெறுபேறுகள் கிடைத்ததும் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளை ஆரம்பிக்க உள்ளோம்.

இவ்வாறு, அவர் தெரிவித்தார்.

[ஓ-9]

## இன்று

காவலூர் இலக்கிய வட்டத்தின் விசேட பொதுக் கூட்டம் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் கரம்பன் சண்முகநாத மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

(ஓ-16)

## நம்பிக்கை..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள்.

இந்நவசையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த திரு கிட்டுவுடன் உத்தியோகப்பற்றற்ற பேச்சுகள் சென்னையில் நடந்துவருவதாகவும் நாம் அறிகிறோம். யுத்த நிறுத்தம் பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் உத்தியோகபூர்வமாக பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதற்கு ஒரு குழுவை அனுப்புவதற்கும் இலங்கையிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தயாராக உள்ளனர். யுத்தநிறுத்தம் இருதரப்பு யுத்த நிறுத்தமாக இருக்க வேண்டும்.

ஸ்ரீலங்கா அரசாங்கங்கள் கடந்த 40 வருடங்களாக தமது அரசியல் லாபத்திற்காக தமிழரின் இனப்பிரச்சினையைத் தீர்க்காமல் இழுத்தடிக்கின்றன.

அத்தகைய அரசுகளில் ஒன்றை நம்பி இலங்கை இந்திய ஒப்பந்தத்தை அமுல் செய்யும் பொறுப்பை ஒப்படைக்க முடியுமானால், அதே அடிப்படையில் இது வரையில் நடந்தவற்றை மறந்து, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இந்திய அரசு நம்பிக்கை கரம் நீட்ட வேண்டும்.

வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களின் நலன்களில் பெருமளவில் அக்கறை கொண்டு விடுதலைப் புலிகளுடன் நற்பயன் தரக்கூடிய பேச்சுவார்த்தைகளில் இந்திய அரசு ஈடுபட வேண்டும்.

இந்த எண்ணம் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் வெகுவாக வளர்ந்துவருகிறது.

சமாதான ஒப்பந்தத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கிய நடவடிக்கைகளை யும், பாரம்பரிய தமிழ்ப் பிரதேசங்களான மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் நடத்தப்பட்டு வரும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களையும் வாபஸ் பெறுமாறு ஸ்ரீலங்கா அரசாங்கத்தை இந்தியா வற்புறுத்தி இணங்கச் செய்ய வேண்டும் என்றும் வடக்கு கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்கள் கருதுகிறார்கள்.

தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து குடிபெயர்ந்த அகதிகள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி தடங்கலெதுவும் இன்றி தேர்தலில் பங்குபற்றக் கூடியதாக, புனர்வாழ்வு வேலைகளை இடைக்கால நிர்வாகம் ஒன்றின் மூலம் முற்றுகச் செய்த பின்னரே வடக்கு-கிழக்கு மாகாணசபைக்கான உத்தேச தேர்தலை நடத்த முடியும் என்று நாம் ஏற்கனவே இந்தியப் பிரதமருக்கு அறிவித்துள்ளோம்.

இனப் பிரச்சினையை தீர்ப்பதற்கு இராணுவத் தீர்வு உகந்ததல்ல, என்று இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி அடிக்கடி ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்குப் புத்திகூறி வந்தார், சர்வதேசப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் சமாதானப் பேச்சுக்களே நிச்சயமானவை எனவும் அவர் சொல்லிலும், செயலிலும் காட்டி வந்தவர், அப்படி இருக்க தமிழீழ விடுதலைப் புலிகளின் பேச்சுவார்த்தை விருப்பத்தைப் புறக்கணித்து, அவர்களுக்கு எதிராக இராணுவ நடவடிக்கையெடுத்து வருவது ஏனென்றுவிளங்கவில்லை, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கெதிராக நடத்தப்படும் நடவடிக்கைகள், உண்மையில் தமிழ்மக்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகளே என்பதை அவர் உணராமலிருப்பதும் ஏனோ?

இவ்வாறு அந்த அறிக்கையில் உள்ளது [அ-9]

கட்டிட மேற்பார்வையாளர்களிற்கான
## பயிற்சி நெறி

படவரைஞர் (Draughtman) அறிவுள்ளவர்களிற்கு உகந்த இப்பயிற்சிநெறி 120 நாட்களில் அத்திவாரம் தொடக்கம் கூரை வரையிலான 5000 ச. அடி கொண்ட மேல் மாடிக் கட்டிடங்கள் அமைக்கும் யுனைற்றட் எஞ்ஜினியர்களிடமிருந்து பெறும் அரிய சந்தர்ப்பம்.

Interview on 13-6-1988 — 09-30- Hrs
Training Starts on 13-06-1988 14·00 Hrs

UNITED ENGINEERS
Sai Saw Mills
91, Ramanathan Road
KALLADY JAFFNA.
[C/5443]

## சொற்பொழிவு

லண்டன் முருகன் கோவிலில் சமயச் சொற்பொழிவாற்றுவதற்காக திருமதி வசந்தா வைத்தியநாதன் லண்டன் பயணமானார்.

(ஞ-10

## 20 சத வீத..

ருக்கு 18 சதவீதமாகவும் இருக்க வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது.


1987 டிசம்பரில் விதிக்கப்பட்ட கட்டுப்பாட்டை மீளாய்வு செய்யும்படி நிதி நிறுவனங்கள் கூட்டாகவும் தனியாகவும் விடுக்க வேண்டுகோளைத் தொடர்ந்தே மத்திய வங்கி புதிய பணிப்புரையை விடுத்திருக்கிறது. (அ- )

## மோதிரம் யாருடையது?

அச்சுவேலி ஸ்ரீவிபாசி வித்தியாலயத்தைச் சேர்ந்த திரு எஸ் டி பொன்னையா என்பவர் தாம் வீதியில் கண்டெடுத்த தங்க மோதிரம் ஒன்றை உதயன் அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்.

மோதிரத்தின் சொந்தக்காரர், தம ஆள் அடையாள அட்டையுடன் வந்து, உரிய அத்தாட்சிகளைத் தெரிவித்து, உதயன் அலுவலகத்தில் காலை ஒன்பது மணிக்கும் மாலை ஐந்து மணிக்கும் இடையில் பெற்றுக்கொள்ளலாம்.

## ஓராண்டு நினைவஞ்சலி



திரு தம்பு—ஜெகநாதன் (நடராசா)

அன்னை மடியில்: 1950 09—17
ஆண்டவன் அடியில்: 1987—5—25

திதி: 1988—06—12

சிரித்த முகமெங்கே?
உன் கம்பீரத் தோற்றம் எங்கே?
காலன் ஏன் கவர்ந்தான்?
காரணம் தான் புரியவில்லை
நிதமெங்கள் நினைவெல்லாம்
உன்னைச் சுற்றித்தான்
மாறாத்துயரத்தை மாற்ற வழி
தெரியவில்லையே
சுமை தாங்கி என்றும் நிலை சாய்வதில்லை
சுமை கண்டு ஒரு நாளும் தலைசாய்வதில்லை
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

பிரிவாற் துயருறும்:
அன்பு மனைவி பிள்ளைகள்,
தாய் தந்தை சகோதரர்கள்,
சகோதரிகள், மற்றும்
உறவினர்களும், நண்பர்களும்.

உடுப்பிட்டி றோட்,
தொண்டைமானாறு. (4423)

"உயிர்ப்பும் உயிரும் நானே"

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 16-10-1904



உதிர்வு: 14-05-1988

மனைவிளக்கு
ஞானம்மா சீமாப்பிள்ளை

அன்புடனும் பண்புடனும் எம்மை வழி நடத்திய ஆருயிர் அன்னையே குடும்பத்துக்கும், சமூகத்துக்கும் ஆற்றிய தியாகப் பணி ஞான ஒளியாய் எம் இதயக் கோவிலில் காலமெல்லாம் நினைவுகூர வைத்து விண்ணரசு சென்று விட்டார்.

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக 13-06-1988 திங்கட்கிழமை காலை 6 மணிக்கு யாழ். சுண்டிக்குளி திருமுழுக்கு அருளப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் பூசையில், அனைவரையும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்,

நன்றி: அன்புடன் நினைவு கூரும்
குடும்பத்தினர்.

தகவல்: பிரான்சிஸ் சென். றோச்
(விரிவுரையாளர்)

இல. 60, கோவில் வீதி,
யாழ்ப்பாணம் (4424)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பொன்னம்பலம் சொர்ணம்மா

ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கைச் சேர்ந்த திரு பொன்னம்பலத்தின் அருமைத் துணைவியார் திருமதி பொ. சொர்ணம்மா நேற்று காலமாகிவிட்டார். இவர் நல்லூர் கிராமசபையின் முன்னாள் விதானை திரு எஸ். இராசேந்திரன், நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலய ஆசிரியர் திருமதி பொ சண்முகரத்தினம், திருமதி செ சொர்ணராங்கி, காலஞ்சென்ற மகாலிங்கம் (பொறியியலாளர் நைஜீரியா) மூளாய் வைத்தியசாலையில் கடமை புரியும் விசேட வைத்தியநிபுணர் டாக்டர் பொ. சொர்ணலிங்கம், திருமதி செ. ரமணி, திரு பொ. சோதிலிங்கம் ஆகியோரின் தாயாரும், திருமதி இ. பரமேஸ்வரி, திருமதி ச பரமேஸ்வரி (ஆசிரியை கொக்குவில் இந்துக் கல்லூரி), திரு சி செல்வரத்தினம் (ஜேர்மனி), திருமதி ம. சந்திரமலர் (லண்டன்), திருமதி சொ. ஜெயராணி, திரு எஸ். செல்வராசா (இளவாலை உப தபால் கந்தோர்) ஆகியோரின் மாமியாரும், இ. குணேஸ்வரி, இ. சல்வகுமார் (பிரான்ஸ்), இ இராஜேஸ்வரி (யாழ் பல்கலைக்கழகம்) இ.யோகேஸ்வரி(ஆசிரியை கொக்குவில் ஞானபண்டித வித்தியாலயம்), இ புஷ்பராணி இ. ஜெயராணி, செ சுனீதா செ மயூரன், ம ஜசிற்ரு, மலவன் செ.சோபிதன் ஆகியோரின் அருமைப் பேத்தியும், திரு எஸ் சிவபாதசுந்தரம், காலம் சென்ற திருமதி க. பாக்கியலட்சுமி ஆகியோரின் சகோதரியுமாவார் (12-6-88) இன்று காலை 10 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்தில் தகனக்கிரிகைகள் நடைபெறும் உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுங்கள்.

"சொர்ணவாசா" பொ சோதிலிங்கம்
ஆனைக்கோட்டை வீதி, (மகன்)
கொக்குவில் மேற்கு. (4266)

காரைநகர்
### S. P. சுப்பிரமணியம் - (S.P.S.)

காரைநகர் பிரபல வர்த்தகரும், சாப்புறுசிக் கூட்டுத்தாபன முகவரும் தமயந்தியின் அன்புக் கணவரும், சரோஜா, அரிகரன், கிருபாகரன், தனலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும், நடராசா, சிவாம்பிகை, சிவலட்சுமி, பத்மராஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரபாலினி, செந்தூரன், பைரவி, பிரதாபன் ஆகியோரின் பாட்டனுமாவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் சாம்பலோடையில் ஞாயிறு, 12-6-88 இன்று காலை 10 மணிக்கு நடைபெறும் உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ நடராசா

வலந்தலை,
காரைநகர். (4430)

### அந்தோனிப்பிள்ளை ஜோசப்

அந்தோனிப்பிள்ளை ஜோசப் (இளைப்பாறிய காட்டு இலாகா உத்தியோகத்தர் காலமாகிவிட்டார். இவர் கிறிஸ்ரீனா ஜோசேப்பின் அன்புக் கணவரும் அந்தோனி குவைமனஸ் [நோர்வே] ஜோன் றெகுலஸ் [சுவிஸ்] பிறிட்டோவின் மேரி றோஸ் [இங்கிலாந்து], யுஸ்ரீனா, யோவின் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார் அன்னாரின் பூதவுடல் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு நல்லடக்கத்துக்காக புனிதத பொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: யோவின்.

சென். ஜேம்ஸ் மகாவித்தியாலய வீதி,
குருநகர். [4425]

### அருள்திரு J. J இரத்தினராஜா

அருள்திரு J J இரத்தினராஜா அவர்கள் 11-6-88 சனிக்கிழமை காலை இறைவனடி எய்தினார். அன்னார் கனகமலரது அன்புக் கணவரும், திரு. குமார் (ஆசிரியர் கிளிநொச்சி), திருமதி மாலா நேசரத்தினம் (மலேசியா), ஆனந்தன் [UK] மதி [இத்தாலி] ஆகியோரின் அருமைத் தந்தையும், ராஜி ராஜா, ஜயந்தி, ரோனி ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரது இறுதி ஆராதனை மானிப்பாய்த் தேவாலயத்தில் 13-6-88 திங்கள் 2.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும் உற்றார் உறவினர் நண்பர்கள் யாவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
[4261] குமார் இரத்தினராசா

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/3. இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 12-06-1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and published by New Uthayan Publications (Pvt) Ltd; 292/3, Navalar Road, Jaffna on Sunday, 12 th June 1988.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org